# அம்மன் அர்ச்சனை வழிபாடு



ம.ஜெகநாதன் (ஜெக்கி)

உ

# அம்மன் அர்ச்சனை வழிபாடு

## (தமிழில்)



ம.ஜெகநாதன்

கொழும்பு-6

# உள்ளடக்கம்


**தலைப்பு** **பக்கம்**

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் ... .... 01

அம்மன் 1008 போற்றி ... .... 15

அம்பாள் பாதாதி கேச நமஸ்காரம் .. 49





நூல்: அம்மன் அர்ச்சனை வழிபாடு (தமிழில்)

இலவச வெளியீடு: ஒக்டோபர் 2019

தொகுப்பு: ம.ஜெகநாதன் (ஜெக்கி)

பக்கங்கள்: 2+50




# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

ஸ்ரீலலிதா அகில உலகங்களுக்கும் தாய். அவளை தூய மனதுடன் வழிபட்டால் நம் கஷ்டங்களெல்லாம் தீரும். அதற்குச் சுலபமான வழி "ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்" பாராயணம் செய் வதாகும்.

பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலிய உபாதைகளிலிருந்து விடுதலை, விஷ தோஷங்களிலிருந்து நிவாரணம், திருமணம், அன்யோன்ய தாம்பத்ய வாழ்க்கை, தன, தான்ய, ராஜ்ய வசியம், ஆரோக்கியம் போன்ற பலப்பல காரியங்கள் "ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணத்தால்" கைகூடி வருவது அனுபவ பூர்வமான உண்மையாகும்.

இவை அரிய பல அனுகூல பலன்களை தர வல்ல தாரக மந்திரங்களாகும். எனினும் முழுமையாக 'ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்' செய்ய முடியாதவர்கள் அவரவருக்கு உகந்த நாமாவைத் தேர்ந்தெடுத்து குறைந்தது 108 முறையாவது தினசரி பாராயணம் செய்தால் நினைத்த காரியம் கைகூட உதவும்.

இதை எந்நாளும் காலை, மாலை பாராயணம், ஜபம் செய்யலாம்.

ஸஹஸ்ர நாமம் சொல்லி அன்னையின் அருளால் முழுப்பல னையும் பெறுவோமாக!



# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

(தமிழில்)

எண்ணியதை நிறைவேற்றிடும் ஸ்ரீவிநாயகா
ஏற்றமே எந் நாளும் தந்திடுவாய்
போற்றியே நின்னையே சரண் அடைந்தோம்
புகழ்யாவும் அளித்திடுவாய் ஸ்ரீ கணபதியே.

ஓம் உயிரினம் வாழ்ந்திடவே உயர்வெலாம் பெற்றிடவே
பேரின்ப செல்வமதை நல்கும் தாயே
நின்னை வணங்குகிறோம்
அனைத்துத் துன்பங்களைத் தீர்ப்பவளே
அழியாத இன்பத்தைத் தருபவளே
பாசமென்ற கருணை நிலையானவளே
பரிவுடன் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ லலிதாம்பிகையே
ஒப்பும் உவமையும் இல்லாதவளே
சிம்மமதை வாகனமாய்க் கொண்டவளே
பண்டாசுரனை வதம் செய்திட வேண்டி
இந்திரன் செய்த யாகத்தின் புனிதமாக அக்னி
குண்டத்தில் இருந்து எழுந்த ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரியே
விருப்பமென்ற பாசமதை உடையவளே
கொடுஞ் செயலை அழிக்க அங்குசத்துடன் ஜொலிப்பவளே
நெஞ்சமென்ற கரும்பு வில்லைப் பெற்றவளே
ஐந்து கல் மாத்திரைகளை உடையவளே
சிவந்த திருமேனியின் அழகினால் உலகினை மூழ்கச் செய்பவளே
செண்பகம், அசோக மலர்களைக் கூந்தலில் சூடி இளமை கொஞ்சுபவளே
நிலவு போன்ற நெற்றியிலே கஸ்தூரி திலகமுடன்
மன்மதன் இல்லாத் தோரணங்கள் போன்ற புருவம் உடையவளே
முகப்பொளிவென்ற உள்ளமதில் நீந்திடும்
மீன்கள் போன்ற நயனங்களின் நாயகியே
மலர்ந்திட்ட பொலிவான நாசியிலே

தாரகையின் ஒளி மிஞ்சும் மூக்குத்தி அணிந்தவளே
சந்திர சூரியர்களைத் தோடுகளாக அணிந்துமே
கோவைப்பழம் போன்ற அதரங்களுடன்
சுத்தவித்தை முளைத்தது போன்ற
இருபல் வரிசைகளைக் கொண்டவளே
இரத்தின கலசம் போன்ற ஸ்தனங்களால்
ஈசனையே மயங்கச் செய்த மாதாவே
நிகரற்ற அழகான இடைதனை உடையவளே
முப்பட்டையான மோஹிக்கச் செய்யும் மூன்று
மடிப்புக்களை வயிற்றில் உடையவளே
திருவடித் தாமரைகளில் வணங்குவோர் மன இருளை
நகம் என்ற ஒளியாலே நீக்குபவளே
காமேஸ் வரன் துடையில் அமர்ந்திட்ட அன்னையே
சிவத்தின் தத்துவமாகி தனக்கே உரிய துணைவனை
அடைந்திட்ட லோக ரக்ஷகியே
மேருவில் மையச் சிகரமதில் நிலைத்த ஸ்ரீ நகர நாயகியே!
நினைத்ததைத் தந்திடும் சிந்தாமணி இல்லத்தில் இருப்பவளே
ஐந்து பிரம்மாக்களை ஆசனமாய் உடையவளே
தாமரைக் கட்டிலில் உறைபவளே
கதம்ப வன வாசியே
அமிர்தக் கடலின் மத்தியில் வாழ்பவளே
கடைக்கண் கருணையதால் இஷ்டங்களை ஈடேற்றித் தருபவளே
பண்டாசுரன் படைதனை அழித்த சக்திகளை கண்டு மகிழ்ந்தவளே
சர்வாஸ்தர அஸ்திரமதை பண்டாசுரன் விட்டதுமே
இரண்யன், இராவணன், சிசுபாலன் என்ற அரக்கர்கள் தோன்றிடவும்
கைவிரல் நக நுனிகளால் அழிக்கின்ற சாபதாரங்களைத் தோற்றுவித்துமே
அசுர வடிவங்களை அழித்து ஆர்ப்பரித்த ஸ்ரீ லலிதாம்பிகையே!
காமேஸ்வர அஸ்திரத்தால் பண்டாசுரனையும் சூன்ய நகரமதையும்-
தீயாக்கியவளே
பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்களால் துதிக்கப்பட்டவளே
சிவனது நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனை

மீண்டும் உயிர்த் தெழச் செய்து அருளிய மாதாவே
ஸ்ரீமத் வாக்பவ கூடமே நினது முகத்தாமரையாகும்
கண்டத்துக்கு கீழான இடுப்புவரை பகுதியே காமராஜ கூடமாகும்
இடுப்புக்குக் கீழான பகுதியே சக்தி கூடமாகும்
மூல மந்திர உள் பொருளின் தானாக இருப்பவளே
மூல மந்திர முக் கூடங்களின் கருத்தாகத் தன் காரண
உருவின் மூன்று பங்குகளாகக் கொண்டவளே
பார்ப்பவர் பார்வை பார்க்கப் படுவதென்ற திருபுடகுதலமான
மகிழ்வு அமிர்தம் பருகுபவளே
சட்சக்ரங்களுக்கு மேல் உள்ள அகுல சக சாரத்தில் இருப்பவளே
மணி பூரக சக்ரமதில் சர்வாபரணங்களுடன் மின்னுபவளே
மூலாதாரத்தில் சிறப்பாக நிலைத்தவளே
விஷ்ணு முடிச்சினைப் பிளந்திடும் சக்தி படைத்தவளே
சுதா எனும் அமிர்தமதை நிரம்பச் செய்பவளே
புருவத்தின் நடுவில் ஆக்ஞா சக்கரத்தின் மத்தியில் இருப்பவளே
மின்னலைப் போன்ற எல்லையற்ற ஒளி படைத்தவளே
பாக்ய பூஜை மானச பூஜைகளால் உள்ளம் நெகிழ்பவளே
குண்டலினி வடிவமாகி ஜீவசக்தியான உயிரினை எழுப்புபவளே
தாமரை இதழ் போன்ற மெல்லிய தேவியே
குடும்பம் உயர்ந்திட உயிரினைத் தரும் சிவபத்தினியே
பக்தர்களை ரக்ஷிக்கும் சௌபாக்கிய தாரணியே சம்புவின் துணைவியே
நவராத்திரி தெய்வமான சாரதாவே!
லக்ஷ்மி கடாக்ஷம் தனைத் தந்திடும் இனிமைத் திரு உருவே
கற்புக்கரசியாகி காலமாய் ஆனவளே
கார்காலத் திங்கள் போன்ற வதனம் உடையவளே
பொறுமைக்கே தத்துவமான ஞானப் புதுமலரே
குற்றமே அற்றவளான சீல குணக் குன்றமே
தாமே யாவற்றுக்கும் ஆதாரமாகத் தனக்கு அடிப்படை இல்லாதவளே
பந்த பாசம் விட்டவளாகி அழுக்காறு அற்றவளே
உருவமற்ற வளாகி கலக்க மற்றவளே
மூன்று குணங்களுக்கு அப்பாற்பட்டவளே

அகண்ட ரூபிணியாகி ஆடையை விட்டவளே
அழிவில்லாதவளாகி என்றும் முக்தி தருபவளே
மாறுதல் இல்லாதவளாகி எப்பொழுதும் தூய்மையானவளே
காரணமே அற்றவளாகிக் குற்றம் இல்லாத குணமயில் ஆனவளே
மதமே இல்லாதவளாகி மதமதை துவசம் செய்பவளே
கவலையே காணப்படாதவளாகி அகம்பாவம் அற்றவளே
பாவம் அற்றவளாகி பாவமதைத் தீர்ப்பவளே
கோபமே விட்டவளாகிக் கோபத்தை அழித்து நிற்பவளே
சந்தேகம் காணப்படாதவளாகிச் சந்தேகம் தன்னை அகற்றுபவளே
என்றுமே பிறப்பற்றவளாகிப் பிறவிப் பெருங்கடன் தீர்ப்பவளே
வேற்றுமை காணாதவளாகி வேற்றுமை களைபவளே
நாசமே தீர்ப்பவளாகி அடியாரை மரண பயத்திலிருந்து மீட்பவளே
பக்தி இல்லாதவரை நீண்ட தொலைவு தள்ளி வைப்பவளே
துர்க்கையாய் ஆனவளே துன்ப மெல்லாம் துடைப்பவளே
அழியாத சுகமெல்லாம் அள்ளியே தந்திடவே
துணையாக வரும் தோஷமற்றவளே ஸ்ரீ லலிதாம்பிகையே!
அந்தர் யாகம் பக்ஷர்யாகம் என்ற பூஜா வழிகளை வகுத்துத் தந்தவளே
மந்திர யந்திர தந்திர முறைகளை அளித்திட்டவளே
முதன்மையான ஸ்ரீசக்கரம் போன்ற யந்திரங்களின் இதயமானவளே
அறவோர் உள்ளமதும் தத்துவ பீடங்களையும் ஆசனங்களாய் அடைந்தவளே
மகாயாகங்களால் துதிப்பதற்கு உரிமையானவளே
மஹாகல்பமதில் மகேஸ்வரன் செய்திட்ட மஹாதாண்டவத்தின்-
சாக்ஷி ஆனவளே
அறுபத்து நான்கு கோடி யோகினி கணங்களால் வணங்கப்பட்டவளே
மனுவினால் உபாசிக்கப்பட்ட ஸ்ரீவித்யா வடிவானவளே
சராசரப் பிரபஞ்சமதில் தாயாகி ஸ்ரீசக்கரமதில் வாழ்பவளே
பஞ்சபிரம்ம வடிவமாகி சைதன்ய ரூபமானவளே
த்யானம், த்யாத்ரு, த்யேயம் என்ற மூன்று வடிவமாகி
நீதிக்கும் அநீதிக்கும் அப்பாற்பட்டவளே
யாவற்றையும் படைத்த பிரம்ம வடிவமாகியும்
உயிரெல்லாம் காத்திடும் கோவிந்த உருவமானவளே

அழித்தலைப் புரிந்திடும் ருத்ர வடிவமாகி
மறைந்திடுபவளான ஈஸ்வரி ஆனவளே
சதாசிவ வடிவமாகி அருளினைப் பொழிந்து
ஐவகைச் செய்கைகளுடன் இணைந்த அன்னையானவளே
சூர்ய மண்டல மத்தியில் காணப்படும் காயத்திரியே
பகமாலினி என்ற நித்யா தேவதை ஆனவளே
படைப்புக் கடவுள் முதல் புல்புழு வரை யாவற்றையும் ஸ்ருஷ்டித்தவளே
அறம் பொருள் இன்பம் வீடு என்ற நெறிகளை அளித்தவளே
ஆதியும் அந்தமும் காண முடியாதவளே
திருமால் நான் முகன் இந்திரனால் வணங்கப்பட்டவளே
வேதங்களால் உணரப்பட்டவளே
விந்தைகள் பல செய்து வாழ்வினை ரம்யமாக்கும் தாயே
க்ஷேத்திரங்களுக்குத் தலைவியாகி க்ஷேத்திரக்ஞனைப் பரிபாலிப்பவளே
எப்பொழுதும் வெற்றி தத்துவமாகி அனைவராலும் வணங்கப்படுபவளே
வாக்வாதினி என்ற சக்தி வடிவினவள் ஆகி முனிவர்களால் துதிக்கப்பட்டவளே
ஸ்வதர்மம் விட்டவர்களை அழிப்பவளே
நினது மகிழ்வினால் பிரம்மாவின் மகிழ்வை ஒரு திவலை ஆக்குபவளே
பரா என்ற சப்தஸ்வரூபிணியாகி அறிவுத் தன்னுள்ளே நிலை நிறுத்தியவளே
எல்லாப் பொருட்களையும் தன்னுள்ளே கொண்டுமே
அனைத்துத் தேவதைகளுக்கும் சக்திதனைப் பொழிபவளே
காமனால் துதிக்கப்பட்டுச் சிருங்கார ரசம் நிறைந்தவளே
ஜாலாந்திர பீடத்தில் இருப்பவளே
ஒட்டியான பீடத்தில் நிலைத்தவளே
பிந்து மண்டலத்தில் வாழ்பவளே
ரகசிய யாகத்தால் பூஜிக்கப்படும் தாயே
ஆறு அங்க தேவதைகளுடன் கூடியவளாகி
ஆறு குணங்கள் கொண்டவளே
வித்தை அவித்தை என்ற இரண்டு உருவானவளே
அம்மா என அன்புடன் அழைக்கும்
ஆஸீ என்ற சொல் அமிர்தமானவளே
குரு குல்லா தேவியே

கௌல மார்க்கமதில் மனங் கொண்டோரால் வணங்கப்படுபவளே
வேலனுக்கும் விநாயகனுக்கும் தாய் ஆனவளே
நந்தினியாய் வந்தவளே
முக்கண்ணியே உணர்ச்சிகளின் வடிவமாகி
உணர்வுப் பிழம் பானவளே
சித்த வித்யா ரூபிணியே
சித்தர்களின் தாயாகி எல்லையற்ற புகழ் படைத்தவளே
விசுத்தி சக்கரத்தில் நிலைத்துச் சிறிது சிவப்பானவளே
முக்கண்ணுடன் கட்வாங்கம் போன்ற ஆயுதம் தரித்த ஒரு முகத்தாயே
பாயாச அன்னத்தில் ஆசை கொண்டுமே
அமிர்தா போன்ற வலிவுள்ள சத்திகளால் சூழப்பட்டவளே
டாகினி ஈஸ்வரி என்ற பெயர் பெற்றவளே
அநாஹத கலம் கண்டு பச்சை இணைந்த கறுப்பு நிறம் உடையவளே
இருமுகங்கள் கோரப் பற்களுடன் ஜபமாலை அணிந்தவளே
இரத்தத்தில் நிலைத்துமே காள ராத்ரி போன்ற சக்திகள்
நின்னைச் சுற்றி இருக்க, நீர்நிறைந்த அன்னத்தில் ஆசை கொண்டவளே
ராகினி என்ற உருவம் ஆனவளே
மணி பூரக கமலத்தின் மூன்று முகங்களுடன் வஜ்ரம்
முதலிய ஆயுதங்களைத் தரித்தவளே
சிவப்பு நிறமுடன் தாமரி போன்றோர்களால் சூழ்ந்து காணப்படுபவளே
மாமிசத்தில் ஒன்றாகி வெல்லம் இணைந்த அன்னத்தில் ப்ரீதி உடையவளே
அடியவரைக் காத்திடும் லாகினி ஆனவளே
சுவாதிஷ்டான கமலத்தில் இருந்து நான்கு பொளிவு முகங்களுடன்
பொன்னிற மேனியளால், சூலம் போன்ற ஆயுதங்களுடன் கொழுப்பு-
தரும் தாதுவில்
நிறைந்து பத்ர காளி போன்றோர் இணைந்து நிற்க
தயிரன்னத்தில் ஆசை கொண்ட காகினி ஆனவளே
மூலாதார கமலத்தில் நிறைந்திருந்து
ஐந்து முகங்களுடன் எலும்புடன் இணைந்து
அங்குசம் போன்றவை தரித்துமே
வரதா போன்ற சக்திகள் புடைசூழ

பயிற்றம் பருப்பு கலந்த அன்னத்தில் நாட்டம் மிக்க சாகினி ஆனவளே
ஆக்ஞா சக்ர தாமரையில் நிலைத்தவளாகி வெண்மையுடன்
ஆறு முகங்களுமாய் மத்தை என்ற தாதுவில் நிறைந்து ஹம்ஸவதி என்ற
சக்திகள் சூழ்ந்திட மஞ்சள் பொங்கலில் ஆவல் கொண்ட ஹாகினி ஆனவளே
ஆயிரம் தளங்கள் கொண்ட தாமரையில் வீற்றிருந்துமே
எல்லா நிறங்களுடன் ஒளிதந்து
சகல ஆயுதங்களைத் தரித்துச் சுக்கிலதாதுவின் தேவதையாகி
எங்கும் திருமுகம் கொண்டுமே எல்லா அன்னங்களையும் ஏற்று
யாகினி அன அம்பிகையே!
ஸ்வாஹா வடிவம் ஆனவளே
ஸ்வதா வடிவம் ஆனவளே
மாயையாய் இருப்பவளே
அறிவில் உயிரானவளே
வேத நாத மானவளே
வேதக் கருத்தினை முனிவர்கள் தெரிவித்த ஸ்மிருதி ஆனவளே
தனக்கே உவமையில்லாதவளே
புண்ணியத்தின் புகழ் யாவும் தனக்கே உரித்தானவளே
மஹா வித்யா ஸ்ரீவித்யா அமைப்பானவளே
காமேஸ்வரனால் பூஜிக்கப்பட்டுக் காமகோடியாய் விளங்குபவளே
ஸ்ரீஷோட சாக்ஷரி வித்தையின் இதயம் போன்றவளே
நின்கருணை வேண்டி ஏவல் புரியும் கோடி லஷ்மிகளைக் கொண்டவளே
பிரதமை முதல் பௌர்ணமி வரையிலான
பதினைந்து திதி மண்டலங்களில் ஆராதிக்கப்படுபவளே
நின் இடப்புறம் திருமகளும் வலப்புறம் கலைமகளும்
சாமரம் வீசி வணங்கப்படுபவளே
கலிங்கார பீடவடிவமான ஸ்ரீ பராசக்தியே
காமதேனுவாக இஷ்டமதைத் தருபவளே
புவனமதைத் தன் வயிற்றில் தாங்கிய ஹிரண்ய கர்பவடிவானவளே
எல்லா உபநிடதங்களாலும் உணரப்பட்டவளாகி
நான்கு யுகங்களையும் தன்னுள்ளே கொண்டவளே
இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி தோற்றமானவளே

சிந்தித்திடவே முடியாத சீர் மிகு தமிழ் ஆனவளே
கலி தோஷம் அதைப் போக்க வந்த காத்யாயினி ஆனவளே
மாதுளம் பூ போன்ற திருமேனி ஆனவளே
மான் விழிகள் சுழற்றியதால் மயக்கம் அதைத் தருபவளே
தாம் பூலம் தரித்த செம்பவள வாய் கொண்டவளே
கண்டவரை மயங்கச் செய்யும் மோஹ திருவடிவே
நிஷ்டையின் எல்லையில் இருப்பவளே
தாமரைக் கொடி போன்ற புஜங்களை உடையவளே
தெய்வீக நறுமணமுடன் கூடியவளே
உமா எனப் பாசமுடன் அழைக்கப்படுபவளே
பூமா என்ற பரமார்த்த ரூபிணியே
நாம பாராயணத்தில் எல்லையில்லா மகிழ்வு கொண்டவளே
செம்பருத்திப்பூ நிறம் உடையவளே யக்ஞ வடிவானவளே
துதிப்பதற்கு உரிய பர்வத ராஜ குமாரியே
மாசற்றவளே சத்ய ஞான ஆனந்த உருவானவளே
வயது முதிர்ந்தவளே, வரலாறு கொண்டவளே
பெரிய நாயகியே அந்தணன் துணைவியே
காலத்தின் அர்த்தமாகிக் காலமாய் ஆனவளே
'க' என்ற அக்ஷர வடிவானவளே
இயற்கையாகவே இனிமை பொருந்தியவளே
எக்காலமும் உதயமாகி இருப்பவளே
கொடையில் நாட்டம் கொண்டவளே
தருமத்தின் இலக்கணமே
பெருந்தன்மை வடிவமான தாயே ஸ்ரீ மஹேஸ்வரியே!
இந்திராணியால் துதிக்கப்பட்டவளே
அவர் அவர் புண்ணிய பாவ அடிப்படையில் வாழ்வை அமைத்துத் தருபவளே
ஆகாயம் போன்ற அனைத்து உலகினையும் படைத்தவளே
யாவற்றிற்கும் முதன்மை வடிவான தாயே
தன்னையே அடையச் செய்யும் மாதாவே
சகல விதமான மரண அச்சம் போக்கிச் சமாதானம் செய்பவளே
அர்த்த நாரீஸ்வரன் தத்துவ மதின் விமர்ச உருவானவளே

சகல பிணிகளையும் போக்கி மனோதிடம் தருபவளே
பிரம்மஞான மலராகி கைலாயம் தனில் அமர்ந்திருப்பவளே
ஆத்ம வித்யா தாயாகி நவதுர்க்கை வித்தையாய் ஆனவளே
உலகின் முடிவு நேரமதில் வரப்போகும் பிரளயமதின்சாஷி ஆனவளே
பராசக்தி வடிவமாகி பாருக்கே புண்ணிய நிழல் தருபவளே
உலகினை ஆட்சி செய்வோர்க்கெல்லாம் தலைவியாய் விளங்குபவளே
புனிதமென்ற கனவு நதியை ஆகிப் பூரித்தே வருபவளே
தான் என்ற அகம்பாவம் அழித்திடவே தட்சனின் யாகம் அதை நாசம் செய்தவளே
மயங்கியவள் போன்று காணப்படுபவளே
மாத்ருகா வர்ண ரூபமானவளே
வானவில் போன்று ஒளி படைத்தவளே
இதயத்தில் நிறைந்திருந்து இளமை பொருந்தியவளே
காவிய வர்ணனைகளில் நிறைந்திருப்பவளே
மிகவும் இரகசிய வடிவானவளே
பிரமாண்ட மண்டலங்களை வேடிக்கையாக உருவாக்கியவளே
தன்னையன்றி வேறு எதுவிமேயின்றி தனித்து இருந்திடும் தாயே
அடியவர் பசிதீர அன்னமதைத் தருபவளே
மங்களநாயகியே மனதினில் நிறைந்தவளே
உயர் நலம் தந்திடும் உத்தமியே
ராஜாதி ராஜாக்களுக்கெல்லாம் ஈஸ்வரியான அன்னையே
உலகுக்கே முதன்மையான யாவற்றிலும் சிறந்தவளே, பரிசுத்தத்தின்
பரிசுத்தமான அனேக கோடி பிரமாண்டங்களைத் தோற்றுவித்தவளே
மும்மூர்த்திகளுக்கும் முந்தையவளான மூத்தவளே
நற்குணங்கள் யாவற்றுக்கும் நடுநாயகமாக இருப்பவளே
மூவுலகங்களாலும் துதிக்கப்படுபவளே
மூன்று அடசர வடிவமாகிய தெய்வீக திருமலரானவளே
உண்மையும் மகிழ்வுமே ஒன்றாக இணைந்திருப்பவளே
அகத்தியர் மனைவி லோபாமுத்திரையால் பூஜிக்கப்பட்டவளே
தனது கருணையதால் த்வைத திருஷ்டி தீர்ப்பவளே
த்வைத்தினின்றும் இயற்கையாகவே விடுபட்டவளே
பிரம்மாவின் எல்லையற்ற சக்தி வடிவமான

வாக்கு தேவதையால் பிரம்மானந்தம் என்ற உருவமாகிப் பேரின்பம் தருபவளே
துதிப்பவர் இல்லமதில் மங்களமாய் நிறைந்தவளே
உயர் நலம் அளித்துப் பெரு நிதி தருபவளே
நின்னை நாடி வருவோரை அரச பீடமதில் அமர்த்துபவளே
ராஜ்ய லட்சுமியாய் விளங்கி பொக்கிஷமதைக் காப்பவளே
மந்தாரப் பூவினில் நாட்டம் கொண்டவளே
எல்லாருடைய ஏற்றங்களிலும் நிறைந்திட்டவளே
மூச்சினைத் தந்துமே மூச்சாக இருப்பவளே
மல்லனைக் கொன்ற மார்த்தாண்ட வைரவரால் போற்றப்பட்டவளே
உயிர்களுக்கும் இந்தியங்களுக்கும் தெய்வமாய் இருப்பவளே
உயிர் சக்தி இந்திரிய சக்தி தனை அருளிடும் சர்வ சக்தி யானவளே
வீரர்களுக்குப் பெற்றவளாய்க் காட்சி தருபவளே
முக்திக்கே ஆதாரமான ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சக்திகளுக்கு-
மூலாதாரமானவளே

வாழ்க்கைச் சக்கரமதைச் சுழலச் செய்பவளே
வேதங்களின் ஸ்வாச துடிப்பான காயத்திரியாய் ஜொலிப்பவளே
சொல்லில் அடங்காத புகழினைப் பெற்றவளே
மனதாழமே காணமுடியாதவளாகி அற்புதலீலைகள் செய்திட்டவளே
இயற்கையின் இனிய சுகம் கொண்ட மீனாட்சியே
மகிழ்வு நிலவாகத் தவழ்ந்திடும் ஞானமழலையே
அறிஞர்களாலும் சாமான்யர்களாலும் ஆராதிக்கப்படுபவளே
தாமரை மலரின் மென்மைக்கு இணையான புண்ணகை வடிவானவளே
அரக்கர்களை அழித்திடவே மன அரக்க குணம் அழிப்பவளே
உலகினையே தன்வயமாக்கி கொண்ட காந்த வடிவானவளே
சத்தியமே உருவாகி ஜன்மமதை உயர்வாக்கிடும் சாவித்திரி ஆனவளே
நித்மும் நிம்மதியை அளித்திடும் சச்சிதானந்த மானவளே
அறுபத்துநான்கு கலைகளுக்கும் இருப்பிடமானவளே
அறிவு கலம்பகமாக மாந்தரை ஆக்கிடும் சரஸ்வதியே
சாத்திரங்களை உண்டாக்கியும் சாத்திரங்களால் அறியப்பட்டவளே
தர்மமே உருவான மங்கள சிவனுக்குக் கொடை என்ற இதயம்-
ஆகிவிட்டவளே

தலைசான்ற அறவோர்க்கு மோட்சம் அதைத் தருபவளே
தட்சனாமூர்த்தியின் வடிவமாகி சனகாதிகளால் வணங்கப்பட்டவளே
அன்பே உருவானவளாகிப் பாசத்தின் எழில்நிலை ஆனவளே
மஹா உக்ர வடிவமான மாதாவே சண்டன் முண்டன் என்ற-
அரக்கர்களை அழித்தவளே
விரதங்களில் எல்லையற்ற ஆசை கொண்டவளே
பூஜை செய்வதற்கு உகந்த புனிதமானவளே
மேருவில் நிலைத்திட்ட மேன்மையானவளே
சகலகலைகளையும் ஹாரமாக அணிந்தவளே
மிகவும் புராதனமான புனிதவதியே
இசையில் அளவிடமுடியாத ஆசை கெண்டவளே
உயிரினிலே நிலைத்திருந்து உயிரையே காப்பவளே
உள் நோக்கில் காணப்படும் ஆன்ம உருவானவளே
அணுக்களில் அணுவே ஆன பரமாணு ஆனவளே
பிரம சக்தியாகி பிரமானந்த வடிவானவளே
முக்திக்கே இருப்பிடமாகி முக்தி தனை அளிப்பவளே
எல்லா சக்திகளுக்குமே மூலாதாரமான ஸ்ரீ ராஜேஸ்வரி ஆனவளே
பிறப்பு, இறப்பு,முதுமை என்ற துயரங்களைத் துடைப்பவளே
மோக்ஷ இன்பம் தந்து அமைதி என்ற அருமருந்து அளிப்பவளே
கடல் சூழ்ந்த பூமி வடிவான காருண்ய தாயே
எங்கும் நிறைந்திருந்து யாவரையும் தன்வயமாக்கிக் கொள்பவளே
குருமண்டலமாக விளங்கி காமகலா ரகசியம் போதிப்பவளே
மாயையாகி மதுமதி என அழைக்கப்படுபவளே
சிவ தத்துவமதை அளித்துச் சிவமாகி விட்டவளே
ஆனந்தமதின் உயிர்க்கலையாகி உள்ளமெல்லாம் பூரிப்பவளே
தில்லைக் கூத்தன் நடனத்துக்கு ஈடு கொடுத்திட்ட தாயே
நந்தி தேவனால் உபாசனை செய்யப்பட்டு நற்கதி தரும் தாயே
அழைத்திடும் குரல் கேட்டு ஓடோடி வருபவளே
அரவணைத்தே பக்தர்களை மகிழச்செய்பவளே
காவியக் கலைகளின் நாயகியாகி கலைகளின் பெருநிதி ஆனவளே
சத்தியம் என்ற நிலைக்களனாகி சத்தியமாய் நிலைத்து நிற்பவளே

என்றும் மகிழ்வுடனே இருந்து பால கதிரவனாய் ஒளி கூட்டுபவளே
தனக்குள்தானே ஆகித் தன்னையே மிகவும் ரசிப்பவளே
விஷ்ணு சக்தியாகி விஷ்ணுவாகவே ஆனவளே
சாமகானமதில் வெகுவாய்ப் பிரியம் கொண்டவளே
எப்போதும் இருப்பவளாகி அழிவற்ற செல்வங்களில் நாயகியானவளே
உலகங்கள் யாவற்றையும் வென்றவளாகி சர்வகுணங்களையும்-
கடந்தவளே
பரிவு என்ற மென்பஞ்சு போன்ற உளம் நிறைந்தவளே
பாலாம்பிகையாக வந்திட்ட கன்னியகுமாரி ஆனவளே
சிந்திக்கும் வேளையிலே சிவனரிசாரமான திரிபுராம்பிகை ஆனவளே
தாரக சக்ரமதின் அதிதேவதை ஆன திரிபுரா ஸ்ரீயை வயமாக்கிக்-
கொண்டவளே
சோம சூர்ய அக்னி குண்டங்களுக்கும் அன்னையான ஸ்ரீ பராசக்தியே
முழுமையான அழகு பொருந்தியவளாகி யாவற்றுக்கும் முன்பு-
தோன்றிய ஸ்ரீதிரிபுராம்பிகையே
பிறப்பென்ற துன்ப நெருப்பினை அணைத்திடும் அமிர்தமழை ஆனவளே
முதுமை என்ற காரிருளை நீக்கிடும் வெயில் ஒளி ஆனவளே
நல்வினை என்ற கடலுக்கு நிலா ஆனவளே
அடியவன் உள்ளமான மயூரத்துக்கு மேகமாய் இருப்பவளே
பிணி என்ற பர்வமதைத் தூளாக்கும் வஜ்ராயுதமாய் வருபவளே
மரணம் என்ற மரத்தினைச் சாய்க்கும் கோடாரியானவளே
எல்லா ஆபத்துக்களையும் நீக்கித் தனதான்யம் தருபவளே
வணங்குபவர்களுக்கு அஷ்ட ஐஸ்வர்யம், அறிவு, ஞானம் அளிப்பவளே
ஐம் பெரும் யாகங்களில் கரை காணமுடியாத பற்றுள்ளவளே
உபாசினி வடிவமாகிச் சுவாசினி பூஜையால் உள்ளம் சிலிர்ப்பவளே
சின் முத்திரையாய் ஞான முத்திரை வடிவமானவளே
முக்குணம் உருவமாகி முக்குணத்தாயானவளே
முக்கோணத்தைக் கண்டவளே
அதிசய சரிதம் படைப்பவளே
எங்கள் அன்னையே
ஆறு உபாசனா வழிகளைக் கடந்த ஞான மலரானவளே

காரணம் பார்க்காமலேயே கருணையை பொழிபவளே
அஞ்ஞான இருள் அகற்றும் மெய்ஞ்ஞான சுடரொளி ஆனவளே
ஸ்ரீசக்ரமதில் வாசம் செய்யும் சகல் மங்களங்களின் தாயானவளே
ஸ்ரீ மஹா திரிபுர சுந்தரியே
சிவனும் சக்தியும் ஒன்றே என்ற உயர்நெறி சாரமதைத் தருபவளே
சொல்லும் விளக்கமும் ஒன்றரத் தழுவினாற் போன்ற சிவ சக்தி ஐக்ய வடிவமே
ஸ்ரீசக்ரமதில் மேல் நோக்கும் நான்கு முக்கோண சிவசக்கரமும்
கீழ் நோக்கிய ஐந்து சக்தி சக்ரமும்
இணைந்திட்டது போன்ற சிவசக்தி ரூபிணியே அழிவற்றவளே
நித்ய பேரானந்த நிலையமானவளே
மாதா ஸ்ரீ லலிதைாம்பிகையே
மாதா ஸ்ரீ லலிதைாம்பிகையே
மாதா ஸ்ரீ லலிதைாம்பிகையே



# அம்மன் 1008 போற்றி

## -தமிழில் அர்ச்சனை-

வழிபாடு என்பது இறைவனுக்கும் இறைபக்தர்களுக்கும் இடையே ஏற்படும் நெருக்க உறவே ஆகும். இந்த நெருக்கம் அர்த்தம் உள்ளதாக இருக்க பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபாடும், மனநிறைவும் கொள்ளவேண்டும்.

ஆண்டவனுக்கு செய்யப்படும் வழிபாட்டு உபசாரங்களுள் அர்ச்சனையே முக்கியத்துவம் பெறுவதாக இந்து சமயம் சொல்கிறது. தமது வேண்டுதலை கடவுளிடம் எடுத்துரைக்கும் ஒப்பற்ற வழிமுறையாகும்.

மந்திர வழிபாட்டில் பாவங்கள் குறைவதோடு ஊழ்வினை கரையவும் வாய்ப்புண்டு.

தெய்வ சக்திகளைத் துணையாக்கித் தரும் இந்த 1008 மந்திரங்களை கஷ்டம் வரும்போதெல்லாம் மனத்திற்குள் படித்தாலே போதுமானது.

இதனால் அம்மன் அருள் பெற்று நீண்ட ஆயுளுடன், நினைத்தவை அனைத்தும் நிறைவேறி, நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.



# அம்மன் 1008 போற்றி

## -தமிழில் அர்ச்சனை-

1. ஓம் அங்கயற்கண் எம்பிராட்டி போற்றி போற்றி
2. ஓம் அரும்பும் இளநகை போற்றி போற்றி
3. ஓம் அண்டங்கள் ஈன்றாய் போற்றி போற்றி
4. ஓம் அலங்கல் ஓதி போற்றி போற்றி
5. ஓம் ஆரமென அணங்கே போற்றி போற்றி
6. ஓம் ஆருயிர்க் கிழத்தி போற்றி போற்றி
7. ஓம் ஆதிக்கு இறைவி போற்றி போற்றி
8. ஓம் ஆவி நாயகி போற்றி போற்றி
9. ஓம் ஆனந்த வெள்ளம் போற்றி போற்றி
10. ஓம் அறந்தழுவு நெறியே போற்றி போற்றி
11. ஓம் மீன நோக்கினாய் போற்றி போற்றி
12. ஓம் வானார் மலையாள் போற்றி போற்றி
13. ஓம் வீரக் கன்னி போற்றி போற்றி
14. ஓம் பெண்களுக்கு அரசி போற்றி போற்றி
15. ஓம் பழுதறு கற்பினோய் போற்றி போற்றி
16. ஓம் வெண்ணகை உமையாள் போற்றி போற்றி
17. ஓம் ஈறிலா ஒருத்தி போற்றி போற்றி
18. ஓம் இமய மயிலே போற்றி போற்றி
19. ஓம் சேற்கண் உமையாள் போற்றி போற்றி
20. ஓம் உலகம் ஈன்றாய் போற்றி போற்றி
21. ஓம் உம்பருள் உயர்ந்தாய் போற்றி போற்றி
22. ஓம் மலர்மென் கூந்தல் போற்றி போற்றி
23. ஓம் மங்கை நாயகி போற்றி போற்றி
24. ஓம் திலக நாயகி போற்றி போற்றி
25. ஓம் தடாதகைப் பூவை போற்றி போற்றி
26. ஓம் அலர்பசும் பொன்னே போற்றி போற்றி
27. ஓம் ஆரதன அமுதே போற்றி போற்றி
28. ஓம் பல்லுயிர் ஈன்றாய் போற்றி போற்றி
29. ஓம் பாங்குறை மங்கை போற்றி போற்றி

30. ஓம் எல்லாம் உடையாள் போற்றி போற்றி
31. ஓம் எங்கள் பெருமாட்டி போற்றி போற்றி
32. ஓம் வீடளிக்கும் அம்மை போற்றி போற்றி
33. ஓம் இகம்போகம் ஈவாய் போற்றி போற்றி
34. ஓம் மடவரல் மாதேவி போற்றி போற்றி
35. ஓம் மின்னங் கயற்கொடி போற்றி போற்றி
36. ஓம் மகரம் பிடித்த வளையாள் போற்றி
37. ஓம் மீனெடுங் கண்ணி போற்றி போற்றி
38. ஓம் கரணமெலாம் கடந்தாய் போற்றி போற்றி
39. ஓம் கள்ளமில் ஒருத்தி போற்றி போற்றி
40. ஓம் பரஞான வடிவே போற்றி போற்றி
41. ஓம் பரமனிடம் பிரியாள் போற்றி போற்றி
42. ஓம் வினைக்கயிறு ஊசலாட்டும் வித்தகி போற்றி
43. ஓம் வேத மயிலே போற்றி போற்றி
44. ஓம் கலைமுழு துணர்ந்தோய் போற்றி போற்றி
45. ஓம் கன்னிஎம் பிராட்டி போற்றி போற்றி
46. ஓம் தென்னவன் கன்னி போற்றி போற்றி
47. ஓம் தவவலி யுடையோய் போற்றி போற்றி
48. ஓம் கன்னியங் கயற்கண்ணி போற்றி போற்றி
49. ஓம் கனகவெற்பன் மகளே போற்றி போற்றி
50. ஓம் தீண்டுதற் கரியாய் போற்றி போற்றி
51. ஓம் திருந்துநான் மறையாள் போற்றி போற்றி
52. ஓம் திருக்காளத்தியாளே போற்றி போற்றி
53. ஓம் தென்னவன் செல்வி போற்றி போற்றி
54. ஓம் அருள்தரும் அம்மை போற்றி போற்றி
55. ஓம் அங்கயற்கண் மடந்தை போற்றி போற்றி
56. ஓம் ஒளியால் உலகீன்றாய் போற்றி போற்றி
57. ஓம் உயிரனைத்தும் காப்பாய் போற்றி போற்றி
58. ஓம் அளியால் வளர்ப்பாய் போற்றி போற்றி
59. ஓம் ஆனந்த உருவே போற்றி போற்றி
60. ஓம் வேத முடிவே போற்றி போற்றி

61. ஓம் விளையாடும் பிராட்டி போற்றி போற்றி
62. ஓம் போதையாய் உலகின்றாய் போற்றி போற்றி
63. ஓம் பரஞானப் பூங்கோதை போற்றி போற்றி
64. ஓம் மாதர் அரசே போற்றி போற்றி
65. ஓம் மதுரைப் பிராட்டி போற்றி போற்றி
66. ஓம் ஞான மூர்த்தி வெட்பே போற்றி
67. ஓம் ஞானப் பெருமகள் போற்றி போற்றி
68. ஓம் மீனவன் மகவாம் பிராட்டி போற்றி
69. ஓம் காமரு வல்லி போற்றி போற்றி
70. ஓம் கருங்கயற் கணங்கு போற்றி போற்றி
71. ஓம் சோம சேகரன் பங்கினோள் போற்றி
72. ஓம் சுந்தர வல்லி போற்றி போற்றி
73. ஓம் செழியன் செல்வி போற்றி போற்றி
74. ஓம் தென்றல் நாடன் திருமகள் போற்றி
75. ஓம் கமலமுகப் பிராட்டி போற்றி போற்றி
76. ஓம் குமரற்கு ஊட்டும் உமையே போற்றி
77. ஓம் கடலமுதப் பிராட்டி போற்றி போற்றி
78. ஓம் மதுர மொழுகிய தமிழே போற்றி
79. ஓம் பாண்டிப் பிராட்டி போற்றி போற்றி
80. ஓம் தென்னற் கொருசெல்வி போற்றி போற்றி
81. ஓம் மன்னற் கொருசெல்வி போற்றி போற்றி
82. ஓம் இன்னமுது சமைத்த அன்னாய் போற்றி
83. ஓம் தென்னன் தமிழுடன் பிறந்தாய் போற்றி
84. ஓம் கருணையின் முழுகிய கரும்பே போற்றி
85. ஓம் கலைமதியெனவளர் கன்றே போற்றி
86. ஓம் தமிழ் மதுரைக்கரசி போற்றி போற்றி
87. ஓம் தமனிய மலைபடர் கொடியே போற்றி
88. ஓம் சங்கம் வளர்ந்திட நின்றாய் போற்றி
89. ஓம் தமிழொடு பிறந்த கொடியே போற்றி
90. ஓம் சிலையில் நெடுங்கணை தொட்டாய் போற்றி
91. ஓம் குன்றளவில் ஆளியை வென்றாய் போற்றி

92. ஓம் குதிகொளுங் கனிச்சுவைப் பெருக்கே போற்றி
93. ஓம் மழலையின் அமுது கிள்ளாய் போற்றி
94. ஓம் செழுமறை தெளிய வடித்தாய் போற்றி
95. ஓம் காலங் கடந்த கடவுள் போற்றி
96. ஓம் கற்பனை கடந்த கற்பகம் போற்றி
97. ஓம் எழுதாச் சொல்லின் மழலாய் போற்றி
98. ஓம் இகபரம் முழுதும் தருவாய் போற்றி
99. ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே போற்றி
100. ஓம் துவாத சாந்தம் கடந்தாய் போற்றி
101. ஓம் மூலத் தலத்து முதலே போற்றி
102. ஓம் முக்கட் சுடர்க்கு விருந்தே போற்றி
103. ஓம் பரமா னந்தப் பெருக்கே போற்றி
104. ஓம் சிறியேம் பெற்ற பேறே போற்றி
105. ஓம் தெய்வக் கூடல் தழைத்தாய் போற்றி
106. ஓம் செங்கோற் செழியர் மகளே போற்றி
107. ஓம் முதுதமிழ் உத்தியின் திருமகள் போற்றி
108. ஓம் முழுதுல குடையதோர் குலமணி போற்றி
109. ஓம் செஞ்சோற் கூடல் கொண்டாய் போற்றி
110. ஓம் நெஞ்சக் கஞ்சமும் கொண்டாய் போற்றி
111. ஓம் காவலன் மகளே போற்றி போற்றி
112. ஓம் கயற்கண் ணாயகி போற்றி போற்றி
113. ஓம் கவுரியன் மகளே போற்றி போற்றி
114. ஓம் கண்ணா ரமுதே போற்றி போற்றி
115. ஓம் தொடுக்கும் பாடற் பயனே போற்றி
116. ஓம் துறைத்தீந் தமிழின் சுவையே போற்றி
117. ஓம் அகந்தைக் கிழங்கை யகழ்வாய் போற்றி
118. ஓம் உளக்கோயிற் கேற்றும் விளக்கே போற்றி
119. ஓம் இமயப் பொருப்பின் பிடியே போற்றி
120. ஓம் குமரித் துறைமகள் போற்றி போற்றி
121. ஓம் பிறவிப் பெரும்பிணி மருந்தே போற்றி
122. ஓம் பிறைமௌலிப் பெம்மான் விருந்தே போற்றி

123. ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி போற்றி
124. ஓம் பழமறையின் குருந்தே போற்றி போற்றி
125. ஓம் பரமா னந்தத்தின் விளைவே போற்றி
126. ஓம் அருளே பழுத்த கொம்பே போற்றி
127. ஓம் அரசர்கோ மகளே போற்றி போற்றி
128. ஓம் அன்பர் என்புருகக் கசிவாய் போற்றி
129. ஓம் ஆணிப்பொன் வல்லி போற்றி போற்றி
130. ஓம் ஆகங் கலந்தாய் போற்றி போற்றி
131. ஓம் பாகம் பகிர்ந்த பெண்ணே போற்றி
132. ஓம் திரைக்கை வைகைத் துறை போற்றி
133. ஓம் கருணைப் பெருக்கே போற்றி போற்றி
134. ஓம் அத்தன் மனத்துயர் ஓவியம் போற்றி
135. ஓம் அபிடேக வல்லி போற்றி போற்றி
136. ஓம் திருத்தொண்டர்க் கருள்கனியுங் கனியே போற்றி
137. ஓம் மதுரைத் துரைமகள் போற்றி போற்றி
138. ஓம் கயற்கொடி கொடுத்த கொடியே போற்றி
139. ஓம் பொற்கொடி யிமய மடக்கொடி போற்றி
140. ஓம் சொக்கர் திருவகுக்கு ஒத்தாய் போற்றி
141. ஓம் சொற்பொழி பழம்பாடல் சொன்னாய் போற்றி
142. ஓம் திருமகள் போற்றி கலைமகள் போற்றி
143. ஓம் பொருநைத் துறைவி போற்றி போற்றி
144. ஓம் அண்டர்தம் நாயகி போற்றி போற்றி
145. ஓம் அங்கயற்கண்ணாயகி போற்றி போற்றி
146. ஓம் எவ்விடத்தும் தானாகி நின்றாய் போற்றி
147. ஓம் வெவ்விடத்தை யமுதாக்கும் விரைக்கொடி போற்றி
148. ஓம் கடம்பவனத் தாயே போற்றி போற்றி
149. ஓம் கர்ப்பூர வல்லி போற்றி போற்றி
150. ஓம் திருவால வாயின் மருந்தே போற்றி
151. ஓம் தென்னர்கோன் பெற்ற அமுதே போற்றி
152. ஓம் மணியே போற்றி மருந்தே போற்றி
153. ஓம் கனியே கருணைக் கடலே போற்றி

154. ஓம் வையம் ஒருங்கீன்ற மானே போற்றி
155. ஓம் வடமேரு வில்லியின் வல்லி போற்றி
156. ஓம் கண்ணுதல் உள்ளத்து ஒண்ணுதல் போற்றி
157. ஓம் பாடும் பணியிற் பணித்தாய் போற்றி
158. ஓம் தெளிக்கும் பனுவற் கனியே போற்றி
159. ஓம் களிக்கும் கலாப மயிலே போற்றி
160. ஓம் வாக்குப் பெருகப் பணித்தாய் போற்றி
161. ஓம் காக்குங் கருணைக் கடலே போற்றி
162. ஓம் செந்தமிழ்ச் செல்வம் திளைத்தாய் போற்றி
163. ஓம் சிந்தை குளிரச் சிறந்தாய் போற்றி
164. ஓம் பண்ணும் பரதமும் ஆனாய் போற்றி
165. ஓம் எண்ணும் பொழுதில் இரங்குவாய் போற்றி
166. ஓம் விண்ணும் புவியும் கலந்தாய் போற்றி
167. ஓம் கண்ணும் கருத்தும் நிறைந்தாய் போற்றி
168. ஓம் கல்விச் செல்வப் பேறே போற்றி
169. ஓம் கண்கண்ட தெய்வம் போற்றி போற்றி
170. ஓம் இமய வல்லி போற்றி போற்றி
171. ஓம் யாவும் ஆவாய் போற்றி போற்றி
172. ஓம் உமையம்மை மாதேவி போற்றி போற்றி
173. ஓம் உண்ணா முலையாய் போற்றி போற்றி
174. ஓம் அணியிழை மங்கை போற்றி போற்றி
175. ஓம் அரையன் பாவை போற்றி போற்றி
176. ஓம் ஆனந்த வடிவே போற்றி போற்றி
177. ஓம் பூவைநிறப் பெருமாட்டி போற்றி போற்றி
178. ஓம் பனிமலை மகளே போற்றி போற்றி
179. ஓம் பெரிய அம்மை போற்றி போற்றி
180. ஓம் பெரிய நாயகி போற்றி போற்றி
181. ஓம் மாணிக்க வல்லி போற்றி போற்றி
182. ஓம் மகரத வல்லி போற்றி போற்றி
183. ஓம் அபிடேக வல்லி அடியினை போற்றி
184. ஓம் அங்கையற் கண்ணமுது போற்றி போற்றி

185. ஓம் மங்கையர் கரசி போற்றி போற்றி
186. ஓம் தமிழொடு பிறந்தாள் போற்றி போற்றி
187. ஓம் பழமதுரை வளர்ந்தாள் போற்றி போற்றி
188. ஓம் தமிழ்க்கடல் தழைவித்த அமுதே போற்றி
189. ஓம் பண்ணார் இன்னிசைத் தமிழே போற்றி
190. ஓம் தமிழின் ஒழுகும் நறுஞ்சுவை போற்றி
191. ஓம் முக்கட் சுடரின் விருந்தே போற்றி
192. ஓம் மும்முதல் வித்தே போற்றி போற்றி
193. ஓம் பரமானந் தத்தின் விளைவே போற்றி
194. ஓம் பழமறைக் குருத்தே போற்றி போற்றி
195. ஓம் அருள் பழுத்த கொம்பே போற்றி
196. ஓம் பிறவிப் பெரும்பிணி மருந்தே போற்றி
197. ஓம் மலயத் துவசன் வாழ்வே போற்றி
198. ஓம் கல்யாண சவுந்தரி போற்றி போற்றி
199. ஓம் பொருநைத் துறைவன் பொற்பாவாய் போற்றி
200. ஓம் புழுகுநெய் சொக்கர் பொன்னே போற்றி
201. ஓம் போர்க்கோலம் திருக்கோலம் புனைவாய் போற்றி
202. ஓம் போகமாய் விளைந்தோய் போற்றி போற்றி
203. ஓம் புவனமாய்ப் பொலிந்தோய் போற்றி போற்றி
204. ஓம் ஏகமாய் இருந்தோய் போற்றி போற்றி
205. ஓம் எண்ணிருந்து நின்றாய் போற்றி போற்றி
206. ஓம் மும்மைத் தமிழை வளர்த்தாய் போற்றி
207. ஓம் முப்பத் திரண்டறம் வளர்த்தாய் போற்றி
208. ஓம் ஆனேறு ஏறும் அரசி போற்றி
209. ஓம் கம்பைமா நதியின் கற்பகம் போற்றி
210. ஓம் பின்தாழ் நறுங்கூந்தல் பிடியே போற்றி
211. ஓம் பண்ணே போற்றி பயனே போற்றி
212. ஓம் பகையே போற்றி உறவே போற்றி
213. ஓம் பண்ணும் பரதமும் ஆனாய் போற்றி
214. ஓம் கண்ணும் கருத்துமாய் நின்றாய் போற்றி
215. ஓம் கல்விப் பெருஞ்செல்வப் பேறே போற்றி

216. ஓம் கண்கண்ட தெய்வக் கனியே போற்றி
217. ஓம் மன்னிய கருணா நிதியே போற்றி
218. ஓம் மறைமுடி வளரும் பைங்கிளி போற்றி
219. ஓம் எளியேம் சொன்மாலை ஏற்போய் போற்றி
220. ஓம் ஆறாத துயரம் அழிப்பாய் போற்றி
221. ஓம் பேறாகி வாழும் பெண்ணே போற்றி
222. ஓம் பெண்டகை மாமணி போற்றி போற்றி
223. ஓம் பெரிய நாயகி போற்றி போற்றி
224. ஓம் உரைவிளங்கமுத வல்லி போற்றி
225. ஓம் திசை புகழ் குழந்தை அமுதே போற்றி
226. ஓம் அன்பர் உளக்கமலம் அமர்ந்தோய் போற்றி
227. ஓம் காமரு கண்டர்தம் அன்பே போற்றி
228. ஓம் அன்பரக வாழ்வே அமுதே போற்றி
229. ஓம் செம்மலை மீது படரும் பைங்கொடி போற்றி
230. ஓம் தெளிமறை நெறியினர் உளத்தாய் போற்றி
231. ஓம் திருமலி மலைமகள் நின்னடி போற்றி
232. ஓம் அறம்பெறல் நங்காய் அறிவே போற்றி
233. ஓம் நெற்றிவிழி அற்புதனை ஆட்டுவாய் போற்றி
234. ஓம் நெஞ்சம் கரைக்கும் அம்பிகை போற்றி
235. ஓம் குன்றம் பயந்த நறுங்கனி போற்றி
236. ஓம் அளக்க லாகா அமுதே போற்றி
237. ஓம் இளஞ்சாயல் மாதே இன்பமே போற்றி
238. ஓம் அல்லி மலர்குழல் வல்லி போற்றி
239. ஓம் கொள்ளாத் தெவிட்டாச் சுவையே போற்றி
240. ஓம் தேவர் தொழுதெழு தேனே போற்றி
241. ஓம் தேவர் குறவனின் திருவே போற்றி
242. ஓம் பனிமா லிமயம் பயில்வாய் போற்றி
243. ஓம் பணிலம் உயர்த்த பாவாய் போற்றி
244. ஓம் தொழுவார் உளம்நின்ற கொழுந்தே போற்றி
245. ஓம் இருள்கூர் நறுங்குழல் எந்தாய் போற்றி
246. ஓம் அருள்பெறும் அடியவர் அகத்தாய் போற்றி

247. ஓம் ஞான மனங்கமழ் நறுங்கோதை போற்றி
248. ஓம் கருணைப் பரையே கனியே போற்றி
249. ஓம் இருமையும் உதவிடு மடமயில் போற்றி
250. ஓம் தொழுவோர் மனத்துநறும் பாகே போற்றி
251. ஓம் தண்டமிழ்ச் சுவைக்கண்ட தாயே போற்றி
252. ஓம் அண்டர் அஞ்சலிக்கும் அன்னை போற்றி
253. ஓம் இதமுறு பரசுக வடிவே போற்றி
254. ஓம் இமகிரி தரவரும் உமையே போற்றி
255. ஓம் பரமானந்தப் பெருவாழ்வே போற்றி
256. ஓம் பரமானந்தம் உறைவாய் போற்றி
257. ஓம் பெட்பு மனத்தின் சுவையே போற்றி
258. ஓம் புத்தமிழ்து அருந்தும் தாயே போற்றி
259. ஓம் கொழிக்கும் கருணைப் பெருக்கே போற்றி
260. ஓம் கமலா கரபுரத் தலைவி போற்றி
261. ஓம் மடிகொண் டயராது புரப்போய் போற்றி
262. ஓம் அடியார் சிந்தை காண்டோய் போற்றி
263. ஓம் சுடர்பொற் கொடியே சுந்தரி போற்றி
264. ஓம் அறிவினுக்கு அறிவே ஆனந்தம் போற்றி
265. ஓம் தெரிவரிய பூரணமாய் நின்றாய் போற்றி
266. ஓம் சுத்த துரியமாய் நின்றாய் போற்றி
267. ஓம் பெருவளி ஐம்பூதம் ஆனோய் போற்றி
268. ஓம் அருமறைச் சிரப்பொருள் ஆனோய் போற்றி
269. ஓம் ஒன்றாகிப் பலவாகி நின்றாய் போற்றி
270. ஓம் நன்றாகித் தீதாகி நின்றாய் போற்றி
271. ஓம் கருதரிய மலர்மணம் ஆனோய் போற்றி
272. ஓம் கருதரிய கருத்துள் நின்றாய் போற்றி
273. ஓம் அருள்பழுத்த பழச்சுவை அமிர்தே போற்றி
274. ஓம் பொருளெல்லாம் தந்திடும் பொன்னே போற்றி
275. ஓம் அண்டம் அனைத்தும் ஆனோய் போற்றி
276. ஓம் ஆதியந்தம் காட்டா முதலே போற்றி
277. ஓம் நீதிபெறும் குருவாகி நின்றாய் போற்றி

278. ஓம் அகரவுயிர் முதலா ஆனோய் போற்றி
279. ஓம் பகர்வன வெல்லாம் ஆனோய் போற்றி
280. ஓம் அடிமைக்கண் வளர்தெடுத்த அன்னை போற்றி
281. ஓம் ஆனந்த மயமாகி நின்றாய் போற்றி
282. ஓம் அமிர்தே கரும்பே தேனே போற்றி
283. ஓம் அழியாத நிலையாகி நின்றாய் போற்றி
284. ஓம் உயிர்த்திரளை ஆட்டும் உமையே போற்றி
285. ஓம் நாசமுடன் உற்பத்தி நண்ணாய் போற்றி
286. ஓம் காலமும் தேசமும் வகுத்தாய் போற்றி
287. ஓம் பரமாகிச் சொல்லரிய பரையே போற்றி
288. ஓம் இன்றாகி நாளையாய் நின்றாய் போற்றி
289. ஓம் ஐயன் வழியே அமைந்தோய் போற்றி
290. ஓம் சைவச் செழுங்கோடி ஆனோய் போற்றி
291. ஓம் சுகந்தருபரையே சுந்தரி போற்றி
292. ஓம் அவத்துறை மாற்றும் தவந்தாய் போற்றி
293. ஓம் உயிர்க்கெல்லாம் தாயாய் உள்ளோய் போற்றி
294. ஓம் உத்தமக் கௌமாரி உள்தாள் போற்றி
295. ஓம் அளகைப் பெருந்திரு அம்மை போற்றி
296. ஓம் அளவிலா உயிர்கட் கருள்வாய் போற்றி
297. ஓம் மாதவர் மனத்திடைத் தளிரடி போற்றி
298. ஓம் மாண்புடை அற்புத மயிலே போற்றி
299. ஓம் அடியார் மனநிறை விளக்கொளி போற்றி
300. ஓம் ஞானச் செல்வி நல்லாய் போற்றி
301. ஓம் வளமான கலைஞான வல்லி போற்றி
302. ஓம் அளவில் புண்ணியம் பூத்தோய் போற்றி
303. ஓம் அருளே பழுத்த கொடியே போற்றி
304. ஓம் மென்னம் மெய்ஞான என்தாயே போற்றி
305. ஓம் நிலவுவானச் சுடரே போற்றி
306. ஓம் நீங்கா இன்சுவைக் கரும்பே போற்றி
607. ஓம் காரார் முடிக்கிரி மாதே போற்றி
308. ஓம் ஏழ்பே தத்துமைத் தாயே போற்றி

309. ஓம் கோமளப் பொண்ணமுது கோவே போற்றி
310. ஓம் தெய்வதக் கொடிய தேவே போற்றி
311. ஓம் வரையில் முளைத்த மருந்தே போற்றி
312. ஓம் மனத்தவத் துறையும் உத்தமி போற்றி
313. ஓம் வெண்ணீற் றுமையாய் விளங்குவாய் போற்றி
314. ஓம் காரிகை வியூகக் கல்யாணி போற்றி
315. ஓம் வடிவை யம்பிகைக் கொடியே போற்றி
316. ஓம் அடியவர் பாற்பொலி சுடரே போற்றி
317. ஓம் கோமளக் கிளிமொழிக் குழந்தாய் போற்றி
618. ஓம் செல்வக் கொடியே செழிப்பே போற்றி
319. ஓம் அறிவுக் கினிய அம்மை போற்றி
320. ஓம் ஆரருள் ஒருத்தியாய் அமைந்தோய் போற்றி
321. ஓம் தேசுமலை பனிமலைப் புதல்வி போற்றி
322. ஓம் தூண்டா விளக்கே துணிவே போற்றி
323. ஓம் நல்லூர் எழிலுமை நல்லாய் போற்றி
324. ஓம் மலைபெற்ற மருந்தே மணியே போற்றி
325. ஓம் மறையைக் கலைசெய் மாதே போற்றி
326. ஓம் சிவலோகத் துறையும் சிலையே போற்றி
327. ஓம் சிவஞானச் சுயஞ்சோதிச் சுடரே போற்றி
328. ஓம் பெருமணங்கமழ் உமைப் பெண்ணே போற்றி
329. ஓம் பெரியோர் பெற்ற பேறே போற்றி
330. ஓம் அலகில் புவனம் ஈன்றாய் போற்றி
331. ஓம் அடிமை கொண்டருள் உமையே போற்றி
332. ஓம் உலகெலாம் உதவிய ஒருத்தி போற்றி
333. ஓம் மறைநான்கு அரற்றும் வடிவே போற்றி
334. ஓம் மகளிர் கும்பிடும் கோமளம் போற்றி
335. ஓம் பவள வல்லிப் பாவை போற்றி
336. ஓம் பவநோய் மாற்றும் மருந்தே போற்றி
337. ஓம் மலைவல்லி விமலை மாதே போற்றி
338. ஓம் அடியார் உளங்குடி கொண்டோய் போற்றி
339. ஓம் ஊறுஞ் சுவைகொள் அமுதே போற்றி

340. ஓம் திருந்துநல் லுளம்புகு விளக்கமே போற்றி
341. ஓம் திருப்பெரு மணத்தமர் அருளே போற்றி
342. ஓம் ஓங்குந் தமிழில் உறைவாய் போற்றி
343. ஓம் உலகம் உவக்கும் உமையே போற்றி
344. ஓம் மாறா அன்பர் உளத்தாய் போற்றி
345. ஓம் மறையெனு மாவிற் குயிலே போற்றி
346. ஓம் கருணை ததும்பும் தேனே போற்றி
347. ஓம் உணர்பவர் உட்பொலி தாயே போற்றி
348. ஓம் கரியகன் ஞாலம் ஆவாய் போற்றி
349. ஓம் கருதுநர் பாலொளி யாவாய் போற்றி
350. ஓம் மறைமுழுவதுமே அணிந்தாய் போற்றி
351. ஓம் மலையிற் பிறந்த மருந்தே போற்றி
352. ஓம் மகிமை அளிக்கும் அனமே போற்றி
353. ஓம் மதிய முடித்தவர் நிதியே போற்றி
354. ஓம் தொண்டர் உளத்தின் விளக்கே போற்றி
355. ஓம் எங்கள் குடிக்கு முதலே போற்றி
356. ஓம் கல்வி மிக்கார் வாழ்க்கை போற்றி
357. ஓம் கருணை சூற்கொண்ட மயிலே போற்றி
358. ஓம் பணியே துணிபினர் பற்றே போற்றி
359. ஓம் மணியே இனிய அமுதே போற்றி
360. ஓம் அருளே உளங்கொள் அனமே போற்றி
361. ஓம் அன்பரைத் தடுத்தே ஆண்டாய் போற்றி
362. ஓம் கலையே மெய்ஞ்ஞானக் கனியே போற்றி
363. ஓம் கண்ணே ஆனந்தக் கடலே போற்றி
364. ஓம் மணியே போற்றி வாழ்வே போற்றி
365. ஓம் மாறாக் கருணை மயிலே போற்றி
366. ஓம் பெரியோர் பெற்ற பேறே போற்றி
367. ஓம் பெற்றியோர் உற்ற வாழ்வே போற்றி
368. ஓம் சிந்தை தேர்ந்தோர் இன்பமே போற்றி
369. ஓம் தெள்ளமிர் தினியே கனியே போற்றி
370. ஓம் குடிமுழுவதும் அடிமை கொண்டாய் போற்றி

371. ஓம் கோலவெண்ணீற்றின் உமையே போற்றி
372. ஓம் சூழும் பிறவி ஒழிப்பாய் போற்றி
373. ஓம் தோலா வளமையூராய் போற்றி
374. ஓம் இமயம் உயிர்ந்த மருந்தே போற்றி
375. ஓம் இன்பச் சுவையின் அமுதே போற்றி
376. ஓம் வேண்டும் அடியார் விருப்பே போற்றி
377. ஓம் விருப்பறா துள்ளம் அமர்வாய் போற்றி
378. ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே போற்றி
379. ஓம் தூண்டா விளக்கே போற்றி போற்றி
380. ஓம் அணுகற்கரிய பேர் ஒளியே போற்றி
381. ஓம் அறிவிலார்க் கினிய தேனே போற்றி
382. ஓம் எல்லா உலகும் ஈன்றாய் போற்றி
383. ஓம் இமயவர் போற்றும் பிடியே போற்றி
384. ஓம் மயிலற்றவர் மெய்ப் பொருளே போற்றி
385. ஓம் கயிலத் தரசன் மகளே போற்றி
386. ஓம் பொருநைத்துறையன் குலத்தாய் போற்றி
387. ஓம் புணரித் துறைவரும் அமிழ்தே போற்றி
388. ஓம் கன்னேர் உள்ளம் கரைப்பாய் போற்றி
389. ஓம் பொன்னே மணியே போற்றி போற்றி
390. ஓம் தன்னேரிலிக்குத் துணையே போற்றி
391. ஓம் எண்ணான்கு அறமும் பூத்தாய் போற்றி
392. ஓம் தலைவி போற்றி தாயே போற்றி
393. ஓம் தரணி முற்றும் புரப்பாய் போற்றி
394. ஓம் சொல்லற் கரிய மறையே போற்றி
395. ஓம் சுகுமார் இன்பக் கடலே போற்றி
396. ஓம் உள்ளத் தொளிரும் விளக்கே போற்றி
397. ஓம் உலகம் அனைத்தின் உயிர்ப்பே போற்றி
398. ஓம் பொன்னே உலகம் பூத்தாய் போற்றி
399. ஓம் புரந்தாய் வழுதியர் மகளே போற்றி
400. ஓம் மின்னே ஞான விளக்கே போற்றி
401. ஓம் அன்னாய் நெகிழ்வார்க்கு அணியே போற்றி

402. ஓம் அரசீ மறையின் விரிவே போற்றி
403. ஓம் இன்ப விளைவே போற்றி போற்றி
404. ஓம் தமிழில் ஆரணம் தந்தாய் போற்றி
405. ஓம் இமயம் பிறந்த குயிலே போற்றி
406. ஓம் எமது பவப்பிணி யிரித்தாய் போற்றி
407. ஓம் இதய முளைத்த கரும்பே போற்றி
408. ஓம் அறிஞர்கள் அறியும் நாயகி போற்றி
409. ஓம் அருள்விளை யூருறை அன்னாய் போற்றி
410. ஓம் எங்கள் குடிக்கோர் வாழ்முதல் போற்றி
411. ஓம் இன்சொல் உறையூர் நங்காய் போற்றி
412. ஓம் சைவக் குமரி போற்றி போற்றி
413. ஓம் சதுர்மறை யானாய் போற்றி போற்றி
414. ஓம் மங்கல வல்லி போற்றி போற்றி
415. ஓம் மலங்கள் அறுப்பாய் போற்றி போற்றி
416. ஓம் புண்ணிய வெண்ணீறு பூண்பாய் போற்றி
417. ஓம் கண்ணுள் நிறையுங்கனிவே போற்றி
418. ஓம் நினைப்பவர் வினைகள் அறுப்பாய் போற்றி
419. ஓம் நிலையாய் என்றும் நிற்பாய் போற்றி
420. ஓம் கருணை மருந்தே போற்றி போற்றி
421. ஓம் கலையின் வடிவே போற்றி போற்றி
422. ஓம் குடந்தை வாழ்வே போற்றி போற்றி
423. ஓம் மடந்தை நல்லாய் போற்றி போற்றி
424. ஓம் சிந்தனை யொன்றக் கவர்வாய் போற்றி
425. ஓம் வந்தருள் செய்யும் வரமே போற்றி
426. ஓம் யோகியர் சிந்தை யொளியே போற்றி
427. ஓம் பாவியர் தீமை பறிப்பாய் போற்றி
428. ஓம் ஆக்குந் தொழிலும் அறிவாய் போற்றி
429. ஓம் போக்குநந் தொழிலும் அறிவாய் போற்றி
430. ஓம் தண்டமிழ் வாழ்வே போற்றி போற்றி
431. ஓம் தகையோர் புகழே போற்றி போற்றி
432. ஓம் வழிவழியடிமை கொண்டாய் போற்றி

433. ஓம் கொழியருள் வடிவக் கொம்பே போற்றி
434. ஓம் சால நினைப்பவர் உளத்தாய் போற்றி
435. ஓம் வாழ்வே யளிக்கும் தாயே போற்றி
436. ஓம் மறைக்கும் எட்டா மறையே போற்றி
437. ஓம் மனத்தா மரையில் இருப்பாய் போற்றி
438. ஓம் ஞாலம் பொலிதரு முகிலே போற்றி
439. ஓம் சீலம் பொலிவார் செயலே போற்றி
440. ஓம் ஆலம் பொலிந்தவன் அணங்கே போற்றி
441. ஓம் கோலம் பொலிந்த கொம்பே போற்றி
442. ஓம் கருதிக் குழைவார்க் குரியாய் போற்றி
443. ஓம் கரையிலானந்தக் கடலே போற்றி
444. ஓம் வரையின் மருப்புக் கன்றே போற்றி
445. ஓம் இருட்டற உளத்தெழு கதிரே போற்றி
446. ஓம் தரைமுதல் பூத்த கொடியே போற்றி
447. ஓம் தானே யாகிய துணையே போற்றி
448. ஓம் மடமறும் உளத்து விளக்கே போற்றி
449. ஓம் மறையும் உணரா முதலே போற்றி
450. ஓம் புன்புலை யோர்க்கருள் புரிவாய் போற்றி
451. ஓம் புத்தமுதப் பாகே போற்றி போற்றி
452. ஓம் ஆடும் பிரானொடு அமர்ந்தாய் போற்றி
453. ஓம் பாடும் படியெனைப் பணித்தாய் போற்றி
454. ஓம் கொள்கையர் உள்ளக் கோயிலாய் போற்றி
455. ஓம் உள்குவார் நெஞ்சம் உறைவாய் போற்றி
456. ஓம் கருணை பொழியுங் கண்ணாய் போற்றி
457. ஓம் கருத்துள் என்றும் நின்றாய் போற்றி
458. ஓம் தனக்குத் தானே சரியாய் போற்றி
459. ஓம் தாய்போல் எல்லாந் தருவாய் போற்றி
460. ஓம் திருவே வேதச் செல்வி போற்றி
461. ஓம் தேனே எங்குலத் தெய்வம் போற்றி
462. ஓம் அலகில் உலகம் அளித்தாய் போற்றி
463. ஓம் உலகம் எங்கும் நிறைந்தாய் போற்றி

464. ஓம் எண்ணுவார் உள்ளம் இருப்பாய் போற்றி
465. ஓம் எப்போதும் நாவில் இனிப்பாய் போற்றி
466. ஓம் அன்பர் அகத்து வாழ்வே போற்றி
467. ஓம் என்பையும் உருக்கும் இறைவி போற்றி
468. ஓம் எண்ணிய எண்ணிய தருவாய் போற்றி
469. ஓம் எண்ணிய வண்ணம் வருவாய் போற்றி
470. ஓம் கண்ணிய மறையில் கலந்தாய் போற்றி
471. ஓம் காட்சி விருப்பம் தந்தாய் போற்றி
472. ஓம் புண்ணிய வண்ணம் பூண்டாய் போற்றி
473. ஓம் புகழில் மலர்ந்த பொன்னே போற்றி
474. ஓம் காவலர் புகழும் நாயகி போற்றி
475. ஓம் பாவலர் பரவும் பண்ணே போற்றி
476. ஓம் வரமே வாய்க்கும் வடிவமே போற்றி
477. ஓம் அருள்மா முதல்வி போற்றி போற்றி
478. ஓம் சைவக் கொழுந்தே போற்றி போற்றி
479. ஓம் சார்ந்தவர் துணையே போற்றி போற்றி
480. ஓம் தவத்துறை திருமகள் போற்றி போற்றி
481. ஓம் அவத்துறை மாற்றும் அன்னாய் போற்றி
482. ஓம் தண்ணளி பொழியும் கண்ணே போற்றி
483. ஓம் தன்னேர் இலாத் தலைவி போற்றி
484. ஓம் அமரர் தமக்கும் அருள்வாய் போற்றி
485. ஓம் அறியா தவர்க்கும் அருள்வாய் போற்றி
486. ஓம் அடியவர் உளங்குடி புகுவாய் போற்றி
487. ஓம் படிமிசை யெங்கும் பரந்தாய் போற்றி
488. ஓம் தேவர் முடிக்கணி யானாய் போற்றி
489. ஓம் தென்தமிழ் தந்தாய் போற்றி போற்றி
490. ஓம் புகழும் தவத்துறை மணியே போற்றி
491. ஓம் இகழுனர் தமக்கும் இரங்குவாய் போற்றி
492. ஓம் பொருந்துத் துணையாய் போற்றி போற்றி
493. ஓம் மருந்தே யனையாய் போற்றி போற்றி
494. ஓம் உண்ணற் கரிய அமிழ்தே போற்றி

495. ஓம் உவந்தார் உள்ளத்து விருந்தே போற்றி
496. ஓம் கருணைப் பெருமாமயிலே போற்றி
497. ஓம் பெருமை அருள் மாமணியே போற்றி
498. ஓம் தமிழ்ச்சுவை கண்டாய் போற்றி போற்றி
499. ஓம் தவத்துறை அம்பிகை போற்றி போற்றி
500. ஓம் மாறா அருளில் மலர்வாய் போற்றி
501. ஓம் சேரார் தமையும் சோர்வாய் போற்றி
502. ஓம் வாரார் தம்மிடம் வருவாய் போற்றி
503. ஓம் சீரார் செல்வி போற்றி போற்றி
504. ஓம் எவ்வுல கங்களும் ஆண்டோய் போற்றி
505. ஓம் எவ்வகை உயிர்களும் ஈன்றாய் போற்றி
506. ஓம் வேத முடிவின் விதியே போற்றி
507. ஓம் பாதி மதியான் பாதியே போற்றி
508. ஓம் செங்கை முகிழ்த்தெனை யாண்டாய் போற்றி
509. ஓம் செல்வம் அனைத்தும் தந்தாய் போற்றி
510. ஓம் பவத்துறை மாற்றும் பாவாய் போற்றி
511. ஓம் சிவத்திரு வாளர் இடத்தாய் போற்றி
512. ஓம் தவத்திரு வாளர் உளத்தவள் போற்றி
513. ஓம் தவத்துறை யன்னாய் போற்றி போற்றி
514. ஓம் திருவார் இன்பம் அருள்வாய் போற்றி
515. ஓம் தேவர்சூழ் அளகைத் திருவே போற்றி
516. ஓம் உயிர்க்குயிராகும் உணர்வே போற்றி
517. ஓம் ஓயா தென்னுளம் உவந்தாய் போற்றி
518. ஓம் கருணைப் பெருக்கே போற்றி போற்றி
519. ஓம் இருளை அகற்றுஞ் சுடரே போற்றி
520. ஓம் ஞானச் சுடரே போற்றி போற்றி
521. ஓம் நான்மறை போற்றும் நாயகி போற்றி
522. ஓம் முத்தமிழ் உடைய உத்தமி போற்றி
523. ஓம் முடியா வேத முதலே போற்றி
524. ஓம் சைவ நெறியின் வாழ்வே போற்றி
525. ஓம் பொய்யாப் புகழே போற்றி போற்றி

526. ஓம் விண்ணோர் போற்றும் விமலை போற்றி
527. ஓம் பரமன் தவம்வளர் மங்கை போற்றி
528. ஓம் கருணை யாளும் பெருமையாய் போற்றி
529. ஓம் கருணை பொங்கும் இமாகலை போற்றி
530. ஓம் திருமா மறையின் முடிவே போற்றி
531. ஓம் அரனின் மனைவி அமலை போற்றி
532. ஓம் அன்ன பூரணி அன்பே போற்றி
533. ஓம் தருமம் எண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
534. ஓம் சிவஞான வல்லி தவத்தாள் போற்றி
535. ஓம் சிவத்தின் ஞானச் செந்தேன் போற்றி
536. ஓம் அருளை ஆர்ந்த அம்மை போற்றி
537. ஓம் சுருங்கா ஞானச் சுடரே போற்றி
538. ஓம் உலகம் பெற்ற உயர்ந்தோய் போற்றி
539. ஓம் விமலா னந்த வாரிதி போற்றி
540. ஓம் சிவையே பரையே உமையே போற்றி
541. ஓம் சிவகாமி போற்றி சிவச்சுடர் போற்றி
542. ஓம் பொறைமகள் போற்றி பொன்னே போற்றி
543. ஓம் கோமளை சாமளை சோனையே போற்றி
544. ஓம் காமாட்சி போற்றி மீனாட்சி போற்றி
545. ஓம் ஞானப் பூங்கொடி நங்காய் போற்றி
546. ஓம் நாத வடிவே நலமே போற்றி
547. ஓம் அம்பிகை போற்றி அன்பே போற்றி
548. ஓம் வாதி சக்தி கல்யாணி போற்றி
549. ஓம் அறம்வளர்த் தருளும் தேவி போற்றி
550. ஓம் பரகதிப் பொருளறம் வளர்த்தாய் போற்றி
551. ஓம் தெய்வ நாயகித் தேனே போற்றி
552. ஓம் தேவர்கள் மூவர்கள் ஆனாய் போற்றி
553. ஓம் உலகு புரந்த உமையே போற்றி
554. ஓம் பரிசுத்தர் புகழும் பார்வதி போற்றி
555. ஓம் பிரமண் புகழும் பெண்ணே போற்றி
556. ஓம் பிரணவப் பொருளே அரணே போற்றி

557. ஓம் சங்கரன் பங்கில் சார்ந்தாய் போற்றி
558. ஓம் சங்கரி வால சவுந்தரி போற்றி
559. ஓம் குமரனைப் பெறுநற் குணத்தாய் போற்றி
560. ஓம் கொடுமுனைத் திரிசூலி நீலி போற்றி
561. ஓம் இமைய வெற்பின் புதல்வி போற்றி
562. ஓம் அமலை நித்திய வரதி போற்றி
563. ஓம் கவுரி கருணைக் கடலே போற்றி
564. ஓம் மங்கல கல்யாணி மலைமகள் போற்றி
565. ஓம் முதியதமிழரசன் அருமகள் போற்றி
566. ஓம் உத்தம வரதி உயரியோய் போற்றி
567. ஓம் ஐம்பத் தோரட்சரத் தமைந்தாய் போற்றி
568. ஓம் சிவன்மனக் கிளியாய்ச் சிறந்தாய் போற்றி
569. ஓம் தரும வர்த்தினி தண்ணடி போற்றி
570. ஓம் நாலரண் தலைவி நல்லாய் போற்றி
571. ஓம் நூல்முறை கூர்பரி பூரணி போற்றி
572. ஓம் குற்றம் அகற்றிய கொடியே போற்றி
573. ஓம் கற்றவர்க்கு அருளும் கற்பகம் போற்றி
574. ஓம் தமிழே மணக்கும் குமுதம் போற்றி
575. ஓம் திரிபுர சுந்தரி திருவே போற்றி
576. ஓம் கரிபுர கனகச் சிதம்பரி போற்றி
577. ஓம் பிறவியைப் போக்கும் மருந்தே போற்றி
578. ஓம் பறவாப் பசுங்கிளிப் பான்மை போற்றி
579. ஓம் மரகத வண்ணக் கொடியே போற்றி
580. ஓம் புரமெரித் தவளே புனிதாய் போற்றி
581. ஓம் சிவலோக அம்பிகை கீர்த்தி போற்றி
582. ஓம் புவனங் கடந்த புண்ணியாள் போற்றி
583. ஓம் பஞ்சவர் தூதர் தங்காய் போற்றி
584. ஓம் அஞ்சனக் குயிலே அன்பே போற்றி
585. ஓம் செந்தமிழ் மாலை புனைவாய் போற்றி
586. ஓம் பந்தனைப் பனிதீர வந்தாய் போற்றி
587. ஓம் ஐந்தொழில் அருளும் கையினாய் போற்றி

588. ஓம் பைந்தருக் கிளையே சங்கரி போற்றி
589. ஓம் ஆதி போதினி அஞ்சனி போற்றி
590. ஓம் நீதிநூல் நெறிவழா திசைந்தோய் போற்றி
591. ஓம் ஆனந்த வனத்தில் ஆடுவாய் போற்றி
592. ஓம் சிவசங்கரர்பால் மிகுந்தாய் போற்றி
593. ஓம் புவனம் நடத்தும் பாவாய் போற்றி
594. ஓம் பொன்னம் பலப்பைஞ் செல்வி போற்றி
595. ஓம் தெண்தமிழ்த் தில்லை சிவகாமி போற்றி
596. ஓம் கற்றார் உளம்வாழ் கோகிலம் போற்றி
597. ஓம் கொற்றவை சக்தி கணத்தோய் போற்றி
598. ஓம் ஞான விளக்கே ஞாயிறே போற்றி
599. ஓம் மதியிடை விளங்கும் ஒளியே போற்றி
600. ஓம் மதிபதி கஞ்சுளி மலைமகள் போற்றி
601. ஓம் வஞ்சி நற்கொடி வண்மை போற்றி
602. ஓம் பஞ்சை யொத்திடு பதத்தாய் போற்றி
603. ஓம் கயிலாய பரம்பரி கருணை போற்றி
604. ஓம் மயிலுருக் கொண்ட முக்கண்ணி போற்றி
605. ஓம் அரகரி சங்கர அமுதே போற்றி
606. ஓம் பரலோக சங்கரன் பைங்கிளி போற்றி
607. ஓம் பழுத்த வித்தின் பொருளே போற்றி
608. ஓம் பாக்கிய வல்லி பார்வதி போற்றி
609. ஓம் குறிஞ்சிக் கிழவனைப் பெற்றாய் போற்றி
610. ஓம் பெரிய பராசக்தி பெண்ணரசி போற்றி
611. ஓம் கலாப கஞ்சுளி கொந்தளி போற்றி
612. ஓம் சகல உயிர்க்கும் உயிரே போற்றி
613. ஓம் சகமும் உயிரும் பூத்தோய் போற்றி
614. ஓம் வளரும் ஒளிக்குள் ஒளியே போற்றி
615. ஓம் தழைக்கும் சிவத்தின் செயலே போற்றி
616. ஓம் போகம் விளைக்கும் பொருளே போற்றி
617. ஓம் செகமே புகழும் திருவே போற்றி
618. ஓம் வசிகர மங்கலை புரந்தரி போற்றி

619. ஓம் அம்பல வருடன் அமைந்தாய் போற்றி
620. ஓம் அடையார் படையை வென்றோய் போற்றி
621. ஓம் கறையணி கங்கணி கரும்பே போற்றி
622. ஓம் பல்லுயிர்ப் பந்தடித் தாடுமையே போற்றி
623. ஓம் சிவலோகச் சிற்றில் செய்தோய் போற்றி
624. ஓம் திருமகள் உருத்திரை தேவி போற்றி
625. ஓம் மங்கையர்க்கரசி மைக்குழலாய் போற்றி
626. ஓம் வினைதீர வந்த விமலை போற்றி
627. ஓம் ஊழிதொறும் வாழும் சுமங்கலி போற்றி
628. ஓம் ஓசைசேர் புலிசை வாழ்வோய் போற்றி
629. ஓம் கூடரும் குடிலும் கூடுவாய் போற்றி
630. ஓம் தேனொழுகு வாச மஞ்சரி போற்றி
631. ஓம் சாமரை மூசும் வெண்டிகை போற்றி
632. ஓம் சோதிவலப்பாகக் கொடியே போற்றி
633. ஓம் ஆனந்த சொரூபக் கொடியே போற்றி
634. ஓம் உலகுகட்டி ஆளும் கொடியே போற்றி
635. ஓம் சிவகாமி நிமிலக் கொடியே போற்றி
636. ஓம் மாற்றுயர் பொன்னாம் கொடியே போற்றி
637. ஓம் ஞான சிவகாமக் கொடியே போற்றி
638. ஓம் தனிக்கொடி போற்றி தவக்கொடி போற்றி
639. ஓம் சன்மார்க்க நீதிக் கொடியே போற்றி
640. ஓம் இறைவர் வலப்பாகக் கொடியே போற்றி
641. ஓம் எமையீன்ற ஞானக் கொடியே போற்றி
642. ஓம் சிவதருமக் கொடியே போற்றி போற்றி
643. ஓம் பதிக்கொடி நற்கொடி போற்றி போற்றி
644. ஓம் தெய்வக்கொடி போற்றி வான்கொடி போற்றி
645. ஓம் மெய்ஞானக் கொடியே போற்றி போற்றி
646. ஓம் பரமஞானக் பதிக்கொடி போற்றி போற்றி
647. ஓம் வள்ளற் கொடியே போற்றி போற்றி
648. ஓம் மலையான் மகளே மணியே போற்றி
649. ஓம் மலையின் அரிவை மாமகள் போற்றி

650. ஓம் மங்கை நல்ல மாதே போற்றி
651. ஓம் பண்ணின் இன்மொழிப் பாவை போற்றி
652. ஓம் மொழியில் அடங்கா மொழியோய் போற்றி
653. ஓம் உருவார் மெல்லியல் பார்ப்பதி போற்றி
654. ஓம் பாலின் நேர்மொழி உடையோய் போற்றி
655. ஓம் மேம்படு தேவி மெல்லடி போற்றி
656. ஓம் விண்ணினை விரும்ப வைத்தோய் போற்றி
657. ஓம் வேள்வியை வேட்க வைத்தோய் போற்றி
658. ஓம் பண்ணினைப் பாட வைத்தோய் போற்றி
659. ஓம் பக்தர்கள் பயில வைத்தோய் போற்றி
660. ஓம் ஆரிருள் அண்டம் வைத்தோய் போற்றி
661. ஓம் அறுவகைச் சமயம் அமைத்தோய் போற்றி
662. ஓம் உட்டங்கு சிந்தை வைத்தோய் போற்றி
663. ஓம் உள்குவார்க்கு உள்ளம் வைத்தோய் போற்றி
664. ஓம் ஆனெய் ஆட வைத்தோய் போற்றி
665. ஓம் அன்பெனும் பாசம் வைத்தோய் போற்றி
666. ஓம் ஊனப்பேர் ஒழிய வைத்தோய் போற்றி
667. ஓம் கதியே உணர வைத்தோய் போற்றி
668. ஓம் ஞானப்பேர் நவில வைத்தோய் போற்றி
669. ஓம் ஞானமும் நடுவும் வைத்தோய் போற்றி
670. ஓம் கொங்கினுள் கரும்பு வைத்தோய் போற்றி
671. ஓம் கூற்றங் கெடுக்க வைத்தோய் போற்றி
672. ஓம் சங்கினுள் முத்தம் வைத்தோய் போற்றி
673. ஓம் சாம்பலும் பூச வைத்தோய் போற்றி
674. ஓம் அங்கமும் வேதமும் வைத்தோய் போற்றி
675. ஓம் ஆரமு துண்ண வைத்தோய் போற்றி
676. ஓம் பார்மல்கி ஏத்தப்படுவோய் போற்றி
677. ஓம் பருப்பத்தே பல்லூழ் நின்றோய் போற்றி
678. ஓம் அல்லல் அடியார்க்கு அறுப்பாய் போற்றி
679. ஓம் அமரர் நன்னாடும் அருள்வாய் போற்றி
680. ஓம் நல்லாரும் பல்லாரும் மேயாய் போற்றி

681. ஓம் நள்ளாறு நாளும் பிரியாய் போற்றி
682. ஓம் முல்லை நகையாள் பாதம் போற்றி
683. ஓம் முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
684. ஓம் தில்லை நடமிடும் தேவி போற்றி
685. ஓம் திருச்சாய்க் காடுறை தேவி போற்றி
686. ஓம் கள்ளம் கடிந்தென்னை ஆண்டாய் போற்றி
687. ஓம் கருத்துடைப் பூதப்படையாய் போற்றி
688. ஓம் உள்ளத்து உவகை தருவாய் போற்றி
689. ஓம் உறுநோய் சிறுபிணி தீர்ப்பாய் போற்றி
690. ஓம் இரவும் பகலுமாய் நின்றாய் போற்றி
691. ஓம் எப்போதும் என்மனம் உள்ளாய் போற்றி
692. ஓம் சீரால் வணங்கப்படுவாய் போற்றி
693. ஓம் திசைக்கெலாம் தேவியாய் நின்றாய் போற்றி
694. ஓம் ஆரா அமுதம் ஆனோய் போற்றி
695. ஓம் அண்ணல் பெருமை உடையாய் போற்றி
696. ஓம் பாரார் பரவப்படுவாய் போற்றி
697. ஓம் பழன நகரெம் பிராட்டி போற்றி
698. ஓம் ஏழுழிக் கப்புறமாய் நின்றாய் போற்றி
699. ஓம் ஆய்ந்து மலர்தூவ நின்றாய் போற்றி
700. ஓம் போராதென் சிந்தை இருந்தாய் போற்றி
701. ஓம் அளவில் பெருமை உடையாய் போற்றி
702. ஓம் உள்ளூறும் அன்பர் மனத்தாய் போற்றி
703. ஓம் ஊராரு மூவுலகத் துள்ளாய் போற்றி
704. ஓம் உலகம் நடுங்காமல் காப்பாய் போற்றி
705. ஓம் ஆண்டுலகேழ் அத்தனையும் வைத்தாய் போற்றி
706. ஓம் அங்கங்கே அமைத்தே நின்றாய் போற்றி
707. ஓம் விடையேறி வேண்டுலகத் திருப்பாய் போற்றி
708. ஓம் தொண்டர்கள் தொழவும் வைத்தாய் போற்றி
709. ஓம் தூமதிபோல் துலங்கும் நுதலோய் போற்றி
710. ஓம் இண்டையத் திகழ வைத்தாய் போற்றி
711. ஓம் எமக்கென்றும் இன்பம் வைத்தாய் போற்றி

712. ஓம் வானவர் வணங்க வைத்தாய் போற்றி
713. ஓம் வல்லினை மாய வைத்தாய் போற்றி
714. ஓம் ஆட்டுவார்க் கருளும் வைத்தாய் போற்றி
715. ஓம் சித்தத்தை ஒன்ற வைத்தாய் போற்றி
716. ஓம் சிவமதே நினைய வைத்தாய் போற்றி
717. ஓம் முத்தியை முற்ற வைத்தாய் போற்றி
718. ஓம் முறைமுறை நெறிகள் வைத்தாய் போற்றி
719. ஓம் இரப்பவர்க்கு ஈய வைத்தாய் போற்றி
720. ஓம் ஈபவர்க்கு அருளும் வைத்தாய் போற்றி
721. ஓம் ஓசையொலியேலாம் ஆனாய் போற்றி
722. ஓம் உலகுக்கு ஓரமுதாய் நின்றாய் போற்றி
723. ஓம் வாசமலர் எல்லாம் ஆனாய் போற்றி
724. ஓம் மலையான் மகளாய் நின்றாய் போற்றி
725. ஓம் பேசப் பெரிதும் இனியாய் போற்றி
726. ஓம் தேச விளக்கெலாம் ஆனாய் போற்றி
727. ஓம் திருவையாறு அமர்ந்திடும் செல்வி போற்றி
728. ஓம் நோக்கரிய திருமேனியுடையாய் போற்றி
729. ஓம் நோவாமே நோக்கருள் வைத்தாய் போற்றி
730. ஓம் காப்பரிய ஐம்புலனும் காத்தாய் போற்றி
731. ஓம் தீப்பரிய வல்வினைநோய் தீர்த்தாய் போற்றி
732. ஓம் மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் போற்றி
733. ஓம் வானுற்ற மாமலை ஆனாய் போற்றி
734. ஓம் வடகயிலை மன்னி யிருந்தாய் போற்றி
735. ஓம் பெண்ணான் பிறப்பிலியாய் நின்றாய் போற்றி
736. ஓம் பெரியார்கட் கெல்லாம் பெரியோய் போற்றி
737. ஓம் உற்றிருந்த உணர்வெல்லாம் ஆனாய் போற்றி
738. ஓம் உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் போற்றி
739. ஓம் கற்றிருந்த கலை ஞானம் ஆனனாய் போற்றி
740. ஓம் கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் போற்றி
741. ஓம் பெற்றிருந்த தாய் அவளின் நல்லாய் போற்றி
742. ஓம் பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி

743. ஓம் எண்டிசைக்கும் ஒண்டசுடராய் நின்றாய் போற்றி
744. ஓம் ஏகம்பம் மேய இறைவி போற்றி
745. ஓம் வண்டிசைக்கும் நறுங்கென்றைத் தாராய் போற்றி
746. ஓம் வாரா உலகருள் வல்லாய் போற்றி
747. ஓம் தொண்டிசைத்து அடிபரவ நின்றாய் போற்றி
748. ஓம் தொண்டாய் அடியேனை ஆண்டாய் போற்றி
749. ஓம் ஐயிரண்டும் ஆறொன்றும் ஆனாய் போற்றி
750. ஓம் அறுமுன்றும் நான்முன்றும் ஆனாய் போற்றி
751. ஓம் செய்வினைகள் நல்வினைகள் ஆனாய் போற்றி
752. ஓம் திசையனைத்தும் மாய்நிறைந்த செல்வி போற்றி
753. ஓம் கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
754. ஓம் கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
755. ஓம் அற்றவர்கட் காரமுதம் ஆனோய் போற்றி
756. ஓம் அல்லலுறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
757. ஓம் பொன்னியனும் மேனியளே போற்றி போற்றி
758. ஓம் பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
759. ஓம் மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
760. ஓம் உன்னுமவர்க்கு உண்மையனே போற்றி போற்றி
761. ஓம் உலகுக்கு ஒருத்தியே போற்றி போற்றி
762. ஓம் சங்கரியே நின்பாதம் போற்றி போற்றி
763. ஓம் சத்தியமே நின்பாதம் போற்றி போற்றி
764. ஓம் போகமிகு நின்பாதம் போற்றி போற்றி
765. ஓம் புண்ணியமே நின்பாதம் போற்றி போற்றி
766. ஓம் செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
767. ஓம் திருமூலட்டானத்தாய் போற்றி போற்றி
768. ஓம் நம்புவார்க்கு அரும் பொருளே போற்றி போற்றி
769. ஓம் நால்வேதம் ஆறங்கம் ஆனோய் போற்றி
770. ஓம் செம்பொருளே திகழ்மணியே போற்றி போற்றி
771. ஓம் உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
772. ஓம் உகப்பார் மனத்தென்றும் ஆனோய் போற்றி
773. ஓம் வள்ளல் பிராட்டியே போற்றி போற்றி

774. ஓம் தொண்டர்குத் தூநெறியாய் நின்றாய் போற்றி
775. ஓம் சூழ்நரகில் வீழாமே காப்பாய் போற்றி
776. ஓம் அண்டத்துக் கப்பாலாய் உள்ளாய் போற்றி
777. ஓம் ஆதிரைநாள் ஆதரித்த அம்மா போற்றி
778. ஓம் ஊமைக்கு அருள் செய்தவளே போற்றி
779. ஓம் மூலா தாரத்தில் நிலைத்தவளே போற்றி
780. ஓம் தூண்டு சுடரனைய சோதி போற்றி
781. ஓம் தொல்லமரர் சூளா மணியே போற்றி
782. ஓம் காண்டற் கரிய கற்பகமே போற்றி
783. ஓம் கருதுவார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
784. ஓம் வேண்டுவோர் வேண்டிய ஈவாய் போற்றி
785. ஓம் பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பீ போற்றி
786. ஓம் பல்லூழிக் காலம் படைத்தாய் போற்றி
787. ஓம் முல்லையங் கண்ணிக் குழலாய் போற்றி
788. ஓம் ஏழ்நரம்பின் ஓசை படைத்தாய் போற்றி
789. ஓம் தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
790. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
791. ஓம் வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
792. ஓம் முக்கண்ணி போற்றி முதல்வி போற்றி
793. ஓம் முருகவேள் தன்னைப் பயந்தோய் போற்றி
794. ஓம் தண்ணியளே போற்றி தாயே போற்றி
795. ஓம் உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
796. ஓம் திருவாகி நின்ற திறமே போற்றி
797. ஓம் கருவாகி யோடும் முகிலே போற்றி
798. ஓம் தேசம் பரவப் படுவாய் போற்றி
799. ஓம் பாசம் அறுக்கும் பண்பே போற்றி
800. ஓம் வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
801. ஓம் வந்தென் சிந்தை புகுந்தாய் போற்றி
802. ஓம் பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
803. ஓம் நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
804. ஓம் பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி

805. ஓம் பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
806. ஓம் முவாய் பிறவாய் இறவாய் போற்றி
807. ஓம் முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
808. ஓம் தேவாதி தேவர்தொழும் தேவி போற்றி
809. ஓம் சேன்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
810. ஓம் பண்டடேஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
811. ஓம் கண்ணாயுலகுக்கு நின்றாய் போற்றி
812. ஓம் கருணை உருவான கனியே போற்றி
813. ஓம் அன்பாகி நின்றார்க்கு அணியே போற்றி
814. ஓம் அருளே உருவாக நின்றாய் போற்றி
815. ஓம் பெருகி அலைகின்ற ஆறே போற்றி
816. ஓம் பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
817. ஓம் உருகி நினைவார்தம் உளத்தாய் போற்றி
818. ஓம் ஊனந்தவிர்க்கும் பிராட்டி போற்றி
819. ஓம் ஆட்சியுலகை உடையாய் போற்றி
820. ஓம் மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
821. ஓம் காட்சி பெரிதும் அரியாய் போற்றி
822. ஓம் மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
823. ஓம் சோதித்தார் காணாமே நின்றாய் போற்றி
824. ஓம் அடியார் அடிமை அறிவாய் போற்றி
825. ஓம் அமரர் பரியாள வைத்தாய் போற்றி
826. ஓம் போற்றி இசைக்கப் பொருந்துவாய் போற்றி
827. ஓம் ஏற்றிசைக்கும் வானமேல் இருந்தாய் போற்றி
828. ஓம் எண்ணாயிர நூற்பெயராய் போற்றி
829. ஓம் ஒளிவளர் விளக்கே போற்றி போற்றி
830. ஓம் உலப்பிலா ஒன்றே போற்றி போற்றி
831. ஓம் தெளிவளர் பளிங்கே போற்றி போற்றி
832. ஓம் திரண்மணிக் குன்றே போற்றி போற்றி
833. ஓம் அளிவளர் அமுதே போற்றி போற்றி
834. ஓம் ஆனந்தக் கனியே போற்றி போற்றி
835. ஓம் நற்பரம் பொருளே போற்றி போற்றி

836. ஓம் கருமையில் வெளியே போற்றி போற்றி
837. ஓம் கயற்கண் நாயகி போற்றி போற்றி
838. ஓம் குணங்குறி யிறந்தோர் கோலமே போற்றி
839. ஓம் கணக நற்றூணே போற்றி போற்றி
840. ஓம் கற்பகக் கொழுந்தே போற்றி போற்றி
841. ஓம் ஏக நாயகி போற்றி போற்றி
842. ஓம் இமயவர்க்கரசி போற்றி போற்றி
843. ஓம் எண்ணுயிர்க் கமுதே போற்றி போற்றி
844. ஓம் எதிரில் போக நாயகி போற்றி
845. ஓம் கற்றவர் விழுங்கும் கற்பகம் போற்றி
846. ஓம் கருணை மாக்கடலே போற்றி போற்றி
847. ஓம் மதிப்பவர் மாமணி விளக்கே போற்றி
848. ஓம் தாயினோர் இரங்கும் தலைவி போற்றி
849. ஓம் வாரணி போற்றி வயிரவி போற்றி
850. ஓம் பராசக்தி போற்றி பயிரவி போற்றி
851. ஓம் சதாசிவ நாயகி போற்றி போற்றி
852. ஓம் சதாசிவ சக்தி போற்றி போற்றி
853. ஓம் காளி போற்றி கன்னி போற்றி
854. ஓம் காமாரி போற்றி கலைநாயகி போற்றி
855. ஓம் சிவகாமி போற்றி சிவசக்தி போற்றி
856. ஓம் புராதனி போற்றி தனிநாயகி போற்றி
857. ஓம் அந்தரி போற்றி அனோரணி போற்றி
858. ஓம் அண்ணல் தையால் போற்றி போற்றி
859. ஓம் ஐயன் மாதேவி போற்றி போற்றி
860. ஓம் கோமள வல்லி போற்றி போற்றி
861. ஓம் குலக்கண்ணி சேவடி போற்றி போற்றி
862. ஓம் சோதியுள்ள நாயகி போற்றி போற்றி
863. ஓம் சுகபுர சுந்தரி போற்றி போற்றி
864. ஓம் சடைமுடிச் சூலினி போற்றி போற்றி
865. ஓம் சன்மார்க்கத் தேவி போற்றி போற்றி
866. ஓம் பந்தத் தலைவி போற்றி போற்றி

867. ஓம் பரியுரை நாரணி போற்றி போற்றி
868. ஓம் பராபரை ஈஸ்வரி போற்றி போற்றி
869. ஓம் பல்லிசைப் பாவை போற்றி போற்றி
870. ஓம் திருமேனிச் சிறுமி போற்றி போற்றி
871. ஓம் திரிபுர சுந்தரி போற்றி போற்றி
872. ஓம் அருந்தவப் பெண்பிள்ளை போற்றி போற்றி
873. ஓம் அருட்செல்வி சேவடி போற்றி போற்றி
874. ஓம் ஆதி சத்தி போற்றி போற்றி
875. ஓம் ஆவுடை அம்மை போற்றி போற்றி
876. ஓம் ஆனந்த சுந்தரி போற்றி போற்றி
877. ஓம் அருந்தவச் சுந்தரி போற்றி போற்றி
878. ஓம் தராசக்தி போற்றி பராசக்தி போற்றி
879. ஓம் ஆங்காரி போற்றி ஓங்காரி போற்றி
880. ஓம் மாசக்தி போற்றி மால்தங்கை போற்றி
881. ஓம் புவன சூடாமணி போற்றி போற்றி
882. ஓம் போகம்செய் சத்தி போற்றி போற்றி
883. ஓம் வானவர் மோகினி போற்றி போற்றி
884. ஓம் வேத சக்தி போற்றி போற்றி
885. ஓம் ஆதி பயிரவ போற்றி போற்றி
886. ஓம் அஞ்சொல் மென்மொழி போற்றி போற்றி
887. ஓம் ஆரணி போற்றி அபிராமி போற்றி
888. ஓம் நீலாங்க மேனி நிறைந்தோய் போற்றி
889. ஓம் நிரதிசய ஆனந்த நிலையாய் போற்றி
890. ஓம் ஏருடை ஞானத் தலைவி போற்றி
891. ஓம் சீருடைச் சிவமங்கை போற்றி போற்றி
892. ஓம் கிரியா சக்தி போற்றி போற்றி
893. ஓம் ஞான சக்தி போற்றி போற்றி
894. ஓம் நவசக்தி போற்றி நாரணி போற்றி
895. ஓம் மனோன்மணி போற்றி மங்கலி போற்றி
896. ஓம் தனியொரு நாயகி போற்றி போற்றி
897. ஓம் தவத்தின் செல்வி போற்றி போற்றி

898. ஓம் ஆதி முதல்வி போற்றி போற்றி
899. ஓம் அம்மென் மொழியாள் போற்றி போற்றி
900. ஓம் நீலி போற்றி நிசாசரி போற்றி
901. ஓம் ஆவின் கிழத்தி போற்றி போற்றி
902. ஓம் ஆவிக்குக் கன்னி போற்றி போற்றி
903. ஓம் நாவின் கிழத்தி போற்றி போற்றி
904. ஓம் நாண்மிகு யசோதி போற்றி போற்றி
905. ஓம் நான்மறைச் சக்தி போற்றி போற்றி
906. ஓம் முத்தியருளும் முதல்வி போற்றி
907. ஓம் முக்கண்ணி மலர்ப்பாதம் போற்றி போற்றி
908. ஓம் செம்மைச் செந்நிறத்தோய் போற்றி போற்றி
909. ஓம் பிறப்பறுத்தாள்வோய் போற்றி போற்றி
910. ஓம் வினைத்தனி நாயகி போற்றி போற்றி
911. ஓம் கலைவாணி போற்றி சுந்தரி போற்றி
912. ஓம் ஆதி முதல்வி போற்றி போற்றி
913. ஓம் சுந்தரச் சோதி போற்றி போற்றி
914. ஓம் கனிவாய் மங்கை போற்றி போற்றி
915. ஓம் கவிகுலப் பாவை போற்றி போற்றி
916. ஓம் குழலார் சிறுபுறக் கொம்பே போற்றி
917. ஓம் கொல்வளைக் குலமங்கை போற்றி போற்றி
918. ஓம் இமயத் தரசி போற்றி போற்றி
919. ஓம் சிலம்பின் மகளே போற்றி போற்றி
920. ஓம் இருவடிக்கண் ஏழை போற்றி போற்றி
921. ஓம் இடப்பாகம் உடையாள் போற்றி போற்றி
922. ஓம் திருவேகம்பர் தேவி போற்றி போற்றி
923. ஓம் இமயத்து அணங்கு போற்றி போற்றி
924. ஓம் குலமலை மானே போற்றி போற்றி
925. ஓம் குன்றக் கோன்திருப் பாவை போற்றி
926. ஓம் பொருப்பன் மகளே போற்றி போற்றி
927. ஓம் பருப்பதத்தின் தையால் போற்றி போற்றி
928. ஓம் நகராசன் மடந்தை போற்றி போற்றி

929. ஓம் கடவுட் கற்பின் மடவரல் போற்றி
930. ஓம் மதந்தந்த மென்மொழி மலரடி போற்றி
931. ஓம் இமயான் பயந்த பாவை போற்றி
932. ஓம் மறப்பெருஞ் செல்வி போற்றி போற்றி
933. ஓம் அறப்பெருஞ் செல்வி போற்றி போற்றி
934. ஓம் குயிலெனப் பேசும் கொம்பே போற்றி
935. ஓம் மயிலிளம் பேடை மணாட்டி போற்றி
936. ஓம் இமயக் கொழுந்தே போற்றி போற்றி
937. ஓம் சிமயக்கோட்டிமயச் செல்வி போற்றி
938. ஓம் வையம் ஏழும் ஈன்றோய் போற்றி
939. ஓம் ஐய திருவயிற்றம்மை போற்றி
940. ஓம் வாளரி நெருங்கண் மலையாள் போற்றி
941. ஓம் தொழுவார் துயர்தீர் தோகை போற்றி
942. ஓம் வழுவாது அறங்கள் வளர்த்தாய் போற்றி
943. ஓம் அன்பியல் அன்னம் போற்றி போற்றி
944. ஓம் அரனின் துணையே போற்றி போற்றி
945. ஓம் கொத்தார் மலர்க்குழல் போற்றி போற்றி
946. ஓம் எம்பிராட்டி அம்மை போற்றி போற்றி
947. ஓம் ஏழுல கீன்றோள் போற்றி போற்றி
948. ஓம் உம்பர் நாயகி போற்றி போற்றி
949. ஓம் ஒழியாக் கருணை போற்றி போற்றி
950. ஓம் அறம்பயந்த அம்மை போற்றி போற்றி
951. ஓம் பிறையணி வாள்நுதல் போற்றி போற்றி
952. ஓம் பிறப்பொலிக்கும் தேவி போற்றி போற்றி
953. ஓம் பைந்தொடிப் பாவை போற்றி போற்றி
954. ஓம் பனிமலை வல்லி போற்றி போற்றி
955. ஓம் பாகங் கொண்ட குலக்கொடி போற்றி
956. ஓம் பிண்ணியத் தாயே போற்றி போற்றி
957. ஓம் மாலை தாழ்குழல் போற்றி போற்றி
958. ஓம் மாமலை உறைவாய் போற்றி போற்றி
959. ஓம் மலைக்குலக் கொடியே போற்றி போற்றி

960. ஓம் மைம்மரு பூங்குழல் போற்றி போற்றி
961. ஓம் அருட்கணைத் தாயே போற்றி போற்றி
962. ஓம் அமுதே அறமே போற்றி போற்றி
963. ஓம் அருளே அறிவுப் பயனே போற்றி
964. ஓம் ஆளுடை அம்மை போற்றி போற்றி
965. ஓம் அகிலம் ஈன்ற அம்மை போற்றி
966. ஓம் அருமறை உடையாள் போற்றி போற்றி
967. ஓம் திருவளம் உடையாள் போற்றி போற்றி
968. ஓம் திருஅறம் புரப்பால் போற்றி போற்றி
969. ஓம் கோதிலா அமுதே போற்றி போற்றி
970. ஓம் உலகு பெறுதாயே போற்றி போற்றி
971. ஓம் ஊன்வளர் உயிரே போற்றி போற்றி
972. ஓம் பிரானுடன் அமர்ந்தாய் போற்றி போற்றி
973. ஓம் பிறப்பில் தாயே போற்றி போற்றி
974. ஓம் பாலினும் நன்மொழி யாளே போற்றி
975. ஓம் யாழினும் மென்மொழி யாளே போற்றி
976. ஓம் வண்டமர் பூக்குழல் மாதே போற்றி
977. ஓம் மழையங் கண்ணி மணாட்டி போற்றி
978. ஓம் வாழ வைப்பாள் போற்றி போற்றி
979. ஓம் அஞ்ச னாட்சி போற்றி போற்றி
980. ஓம் அபிராமி யம்மை போற்றி போற்றி
981. ஓம் அமிர்த கரவல்லி போற்றி போற்றி
982. ஓம் அல்லியங் கோதை போற்றி போற்றி
983. ஓம் அழகம்மை நாயகி போற்றி போற்றி
984. ஓம் அறம்வளர்த்த நாயகி போற்றி போற்றி
985. ஓம் ஆவுடை நாயகி போற்றி போற்றி
986. ஓம் ஆனந்த நாயகி போற்றி போற்றி
987. ஓம் உலக நாயகி போற்றி போற்றி
988. ஓம் ஒப்பிலா முலையம்மை போற்றி போற்றி
989. ஓம் கருந்தார்க் குழலம்மை போற்றி போற்றி
990. ஓம் கனிவாய் மொழியே போற்றி போற்றி

991. ஓம் காமாட்சி யம்மையே போற்றி போற்றி
992. ஓம் காவியக் கண்ணி போற்றி போற்றி
993. ஓம் கேதார கௌரி போற்றி போற்றி
994. ஓம் கொடியிடை நாயகி போற்றி போற்றி
995. ஓம் கோல்வளை நாயகி போற்றி போற்றி
996. ஓம் சிற்றிடை நாயகி போற்றி போற்றி
997. ஓம் திருநிலை நாயகி போற்றி போற்றி
998. ஓம் சுந்தராம்பிகையே போற்றி போற்றி
999. ஓம் சொக்க நாயகி போற்றி போற்றி
1000. ஓம் ஞானப் பூங்கோதை போற்றி போற்றி
1001. ஓம் துணைமாலை நாயகி போற்றி போற்றி
1002. ஓம் நீலாய தாட்சி போற்றி போற்றி
1003. ஓம் பண்மொழி யம்மை போற்றி போற்றி
1004. ஓம் பரங்கருணை நாயகி போற்றி போற்றி
1005. ஓம் பூங்கோதை நாயகி போற்றி போற்றி
1006. ஓம் பெண்ணின் நல்லாள் போற்றி போற்றி
1007. ஓம் வேத நாயகி போற்றி போற்றி
1008. ஓம் வேயிறு தோளியம்மை போற்றி போற்றி



# அம்பாள் பாதாதி கேச நமஸ்காரம்

கோடி சூர்ய பிரகாசமாய் கோயிலில் வீற்றிருக்கும்
கோமளமே உன்னை நமஸ்காரம் செய்கின்றோம்
தங்கச் சிலம்பணிந்த தாமரைப் பாதங்களிலே
தஞ்சம் என்று வந்து நமஸ்காரம் செய்கின்றோம்
காலபயம் நீங்கிடவே காலமெல்லாம் உந்தன்
திருக்கால்கள் தனைக்கண்டு நமஸ்காரம் செய்கின்றோம்
சிவந்த பட்டாடை சிறந்த ஒட்டியாணம் அணிந்த
சிறந்த இடையை நமஸ்காரம் செய்கின்றோம்
கலகலவென்றொலிக்கும் கங்கண வளையணிந்த
கரங்களைக் கண்டு நமஸ்காரம் செய்கின்றோம்
அபயம் அளித்திடும் உன் அல்லி மலர் விரல்களை
அடைக்கலம் என்று நமஸ்காரம் செய்கின்றோம்
புள்ளிமயில் வேலனை அள்ளி அணைத்திடும் உந்தன்
புஜங்களைக் கண்டு நமஸ்காரம் செய்கின்றோம்
மங்கல நாண் அணிந்த உந்தன் செங்கமலக் கழுத்தினை
மங்கலமாய்க் கண்டு நமஸ்காரம் செய்கின்றோம்
சந்திரன் போல் ஜோதியான சுந்தர திருமுகத்தை
சிந்தையில் வைத்து நமஸ்காரம் செய்கின்றோம்
மந்தகாசப் புண்ணகையில் மென்மையாகச் சிவந்த உன்
சின்ன இதழ்களை நமஸ்காரம் செய்கின்றோம்
வல்வினைகளை விலக்கும் நல்முத்துக்கள் போன்ற
உந்தன் பல்வரிசையை நமஸ்காரம் செய்கின்றோம்
முத்து நவரத்தினத்தால் நத்தணிந்த நாசிளை
சித்தத்தில் நினைந்து நமஸ்காரம் செய்கின்றோம்
கருணை பொழியும் உந்தன் கருவண்டு விழிகளை
கருத்தினில் கொண்டு நமஸ்காரம் செய்கின்றோம்

தாடங்கம் அணிந்த உந்தன் தழைமடல் செவிகளில்
தாபங்களைச் சொல்லி நமஸ்காரம் செய்கின்றோம்
மதனன் வில்களைப் போன்ற வளைந்த உன் புருவத்தை
மனதினில் கொண்டு நமஸ்காரம் செய்கின்றோம்
கஸ்துாரித் திலகமிட்ட கற்பகமே உந்தன் திரு
நெற்றிதனைக் கண்டு நமஸ்காரம் செய்கின்றோம்
மருவுடன் நறுமலர் பலவகை சூடிய உன்
கருங்குழல்தனை நமஸ்காரம் செய்கின்றோம்
மாணிக்க மகுடத்தின் மேல் மதியையும் அணிந்த
உன் சிரசினைத் தரிசித்து நமஸ்காரம் செய்கின்றோம்
இன்னல்களைத் தீர்த்தருளும் மின்னல்கொடி போன்ற
உன்னை இதயத்தில் வைத்து நமஸ்காரம் செய்கின்றோம்
இராஜேஸ்விரியே ! புவனேஸ்வரியே ! நமஸ்காரம்.

